# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 251 | சனி, செப்ரெம்பர் 09, 2023 | 15 பக்கங்கள்


# இலங்கை அரசியலை



# அதிரவைத்த சனல் – 4




## சனல்4 காணொளி தற்போது வெளிவர காரணம் என்ன?

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

அகிலன்

## இலங்கை இனமோதலில் இலங்கை வரலாற்றின் முக்கியத்துவமும் இலங்கை அரசின் வரலாற்று பாடவிதானங்களில் பொய்களும் திரிபுகளும் மறைப்புகளும்



கலாநிதி
கந்தையா சர்வேஸ்வரன்

# மக்களை படுகொலை செய்தவர்கள் மீது அனைத்துலக விசாரணை தேவை - பேராயர் ரஞ்சித்



உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு தொடர்பில் அனைத்துலக விசாரணைகள் வேண்டும் என கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 43 வெளிநாட்டவர்கள் உட்பட 269 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

ஆனால் இந்த குண்டு வெடிப்பை பதவியை கைப்பற்றுவதற்காக இலங்கையின் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சாவும், அவரது சகோதரர்களும், இலங்கை புலனாய்வுத்துறை அதிகாரிகளும், இலங்கை அரசுடன் இணைந்து இயங்கிய தமிழ் துணை இராணுவக்குழுக்களும் இணைந்தே மேற்கொண்டதாக

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# மொறோக்கோவில் பாரிய நில அதிர்வு – 800க்குமதிகமானோர் பலி



மொரோக்கோவில் நேற்றிரவு 6.8 ரிக்டர் அளவில் ஏற்பட்ட அதிபயங்கர நிலநடுக்கத்தில் 800-க்கும் அதிகமானோர் பலியாகியிருக்கும் சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

வடஆப்பிரிக்க நாடான மொரோக்கோவில் நேற்றிரவு ஏற்பட்ட அதிபயங்கர நிலநடுக்கத்தால் 800-க்கும் மேற்பட்டோர் பலியான சம்பவம், அந்த நாட்டு மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நிலநடுக்கமானது, மாரகேஷ் (Marrakesh) பகுதியின் தெற்கே 70 கிலோமீட்டர் தொலைவிலுள்ள அட்லஸ் மலைகளில் (Atlas Mountains) அதிகமாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

# மான்களின் உணவிற்கான விற்பனை நிலையம் திறப்பு

திருகோணமலையில் மான்களுக்கான இயற்கை உணவை வழங்கும் நோக்குடனும், சுற்றுலா துறையினை ஊக்குவிப்பதற்காகவும், மான்களுக்கான மருத்துவ செலவு, மான்பூங்காஅழகுபடுத்தும் நோக்குடனும் மான்களுக்கான உணவு விற்பனை நிலையம் திருகோணமலை மான் பூங்காவில் (06) திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் அவர்களின் ஆலோசனைக்கு அமைய கிழக்கு மாகாண சுற்றுலா துறை



தவிசாளர் ஏ.பி.மதனவாசன் அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க திருகோணமலை நகராட்சி மன்ற செயலாளர் வி.ராஜசேகர் அவர்களது ஆதரவோடு Trinco Aid

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# கபோனின் முன்னாள் அரச தலைவர் வெளிநாடு செல்ல அனுமதி

அண்மையில் இராணுவப் புரட்சி மூலம் பதவியில் இருந்து அகற்றப்பட்ட கபோன் நாட்டின் முன்னள் அதிபர் அலி பொங்கோ ஒடிம்பா வீட்டுக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டதுடன், மருத்துவ தேவைக்காகவெளிநாடுசெல்லவும் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



கடந்த 14 வருடங்களாக பதவியில் இருந்த அலி கடந்த மாதம் 30 ஆம் நாள் மீண்டும் தான் தேர்தலில் வெற்றியீட்டியதாக அறிவித்ததை தொடர்ந்து அங்கு இராணுவம் அரசை கைப்பற்றி அவரை வீட்டுக்காவலில் வைத்திருந்தது.

அரச தலைவரை விடுவிப்பதற்கு புதிய அரசு இணக்கம் தெரிவித்தபோதும், அரச தலைவரின் மனைவி உட்பட பல குடும்ப உறுப்பினர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் உள்ளதால் அவர்கள் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளது.

ஆபிரிக்காவில் உள்ள பிரான்ஸ் நாட்டின் ஆதிக்கத்தில் உள்ள பல நாடுகளில் தொடர்ச்சியாக இராணுவப் புரட்சிகள் ஏற்பட்டுவருவதுடன், மேற்குலக படையினரையும் அந்த நாடுகள் அங்கிருந்து வெளியேற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

# கடல்களில் இருந்து ஆண்டுதோறும் 6 பில்லியன் தொன் மண் அகழ்ப்படுகின்றது

உலகில் உள்ள சமூத்திரங்களில் இருந்து ஆண்டுதோறும் 6 பில்லியன் தொன் மண் மற்றும் பாறைகள் அகழ்ந்தெடுக்கப்படுவதால் கடல்வாழ் உயிரினங்கள் அழிவடைவதுடன், சூழலும் பாதிப்படைந்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபையின் சூழல் பாதுகாப்பு அமைப்பு கடந்த செவ்வாய்க்கிழமை (5) வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடற்கரைகளில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகள் மிகவும் ஆபத்தான கட்டத்தை நெருங்கியுள்ளது. உரியினங்களின் பரம்பல்கள் வீழச்சியடையலாம். உயிரினங்களின் வாழ்விடங்களும் அழிவடைகின்றது என ஐ.நா அமைப்பின் பஸ்கல் பெடோசி தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதிலும் கடற்கரைகளில் மேற் கொள்ளப்படும் அகழ்வுகள் தொடர்பான தகவல்களை ஐ.நா சேகரித்து வருகின்றது. அதற்கு உதவியாக செயற்கை நுண்ணறிவையும் பயன்படுத்த அது திட்டமிட்டுள்ளது.

அகழ்வுப்பணிகளில் ஈடுபடும் கப்பல்களை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# சீனாவில் அதிகாரிகள் அப்பிள் தொலைபேசி பயன்படுத்த தடை

அமெரிக்காவின் அப்பிள் தொலைபேசிக மற்றும் ஏனைய வெளிநாட்டு உற்பத்தி தொலைபேசிகளை சீனாவின் அரசியல்வாதிகள் மற்றும் மத்திய அரச அதிகாரிகள் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்க ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவின் முக்கிய அரச அதிகாரிகள் பல வருடங்களுக்கு முன்னரேஅப்பிள்தொலைபேசிகள் பயன்படுத்துவது தடை செய்யபட்டிருந்தது. ஆனால் அது தற்போது பல திணைக்களங்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது.

அப்பிள் தொலைபேசிகளின்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இளையோருக்கு அதிகளவில் புற்றுநோய்கள் பரவுவது கண்டறியப்பட்டுள்ளது

புற்றுநோய்களால் இளம் வயதினர் பாதிக்கப்படுவது அண்மைக்காலங்களில் 79 விகிதத்தால் அதிகரித்துள்ளதாக பிரித்தானியாவின் எடின்பரோ பல்கலைக்கழகமும், சீனாவின் செயின்ங் பல்கலைக்கழகமும் இணைந்து மெற்கொண்ட ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

1990 ஆம் ஆண்டுக்கும் 2019 ஆம் ஆண்டுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 50 வயதுக்கு உட்பட்டவர்களில் புற்றுநோய்கள் பரவுவது அதிகரித்துள்ளது.



அதிகமாக மது அருந்துதல், அதிக உடல்பருமன் போன்றவையே இதற்கான முக்கிய காரணிகள். 2019 ஆம் ஆண்டில் 50 வயதிற்கு கீழ் உள்ள 1.8 மில்லியன் மக்கள் புற்றுநோயினால் பாதிக்கப்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# பிரித்தானியாவில் இரு சிறார்களை காப்பாற்ற முயன்றவர் பலி



பிரித்தானியாவில் Brecon Becons ஏரியில் சிக்கி உயிருக்கு போராடிய இரண்டு சிறார்களை மீட்கும் முயற்சியில் ஈழத்தமிழ் இளைஞர் மரணமடைந்துள்ளார்.

வேல்ஸ் பகுதியில் அமைந்துள்ளது Brecon Becons ஏரி. இந்த ஏரியிலேயே கடந்த வெள்ளிக்கிழமை (1) உயிருக்கு போராடிய இரு சிறார்களை மீட்கும் முயற்சியிலேயே 27 வயதான ஈழத்தமிழ் விமானி மோகனநீதன் முருகானந்தராஜா என்பவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தின் போது மீட்பு குழுவினருக்கு இளைஞர் மோகனின் சடலம் கண்டெடுக்க முடியாமல் போயுள்ளது. ஆனால் 7 மணியளவில் Ystradfellte பகுதியில் சடலம் மீட்கப்பட்டதாக கூறுகின்றனர். மேலும் நீருக்கடியில்

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

## நிபந்தனைகளின்றி இலங்கைக்கு உதவிகளை வழங்கவேண்டாம் என ஐ.நா அமைப்புக்களுக்கு வேண்டுகோள்

இலங்கைக்கு உதவி வழங்கும் ஐக்கிய நாடுகள் சபை அமைப்புக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் இலங்கை அரசின் மனித உரிமை செயற்பாடுகள் மற்றும் இன நல்லிணக்கப்பாடுகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் சமர்ப்பிக்கவுள்ள இலங்கை தொடர்பான அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 11ஆம் நாள் ஜெனீவாவில் கூடவுள்ள 54ஆவது மனித உரிமைகள் சபையின் சமர்ப்பிக்கவுள்ள இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை அரசு இன நல்லிணக்கப்பாடுகள் மற்றும் உண்மைகளை கண்டறிதல் செயற்பாடுகளை பலப்படுத்த வேண்டும். மாகாணசபைகளை வலுப் படுத்தி 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடை முறைப் படுத்த வேண்டும். 2017 ஆம் ஆண்டுக்கு பின்னர் மாகாணசபைகள் இயங்கவில்லை.

உழல்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள் காணி அதிகார மறுசீரமைப்பு, பயங்கரவாத தடுப் புச்சட்ட மறுசீரமைப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை தொடாபில் இலங்கை அரசு காத்திரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இந்த அறிக்கையானது 51/1 ஆவது தீர்மானத்திற்கு பின்னரான கடந்த கால நடவடிக்கைகளை ஆய்வு செய்வதாகும். நீதி நிலைநாட்டப்படுவதில் இலங்கை எந்த முன்னேற்றத்தையும் காணவில்லை அதுவே அங்கு மனித உரிமைகள் நிலைநாட்டப்படுவதற்கு தடையாக உள்ளது. இலங்கையில் நீதி நிலைநாட்டுவதில் பாரிய குறைபாடுகள் உள்ளன. அரசும், அரசியல்கட்சிகளும் அதனை நிலைநாட்டுவதற்கு தீவிரமாக செயற்பட வேண்டும்.

போர்குற்றங்கள், துன்புறுத்தல்கள், அதி காரத்தை தவறாகபயன்படுத்துதல், மக்கள் கூட் டங்களை கட்டுப்படுத்துவதில் வன்முறைகளை பயன் படுத்துதல் என இலங்கையின் மனித உரிமை மீறல்கள் அதிகம். கறுப்பு யூலை வன்முறைகளில் பல நுறுபேர் இறந்திருந்தனர். அதுவே அங்கு இன மோதலை அதிகரித்திருந்தது. கடந்த யூலை அதன் 40ஆவது நினைவு மாதம்.

இலங்கை அதிபர் தமிழர் தரப்பினருடன் பேச்சுக்களை நடத்துவது வரவேற்றக்கத்தது. அவர் 13ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக அரசியல் அதிகார பரவலாக்கம் தொடர்பில் பேசுகிறார். ஆனால் அதற்கு முன்னர் அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி வழங்கப்பட வேண்டும். அதுதான் அதிகார பரவலை வலுவாக்கும். நீதிவழங்கல் பொறிமுறை அனைத்துலக தரத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

இலங்கை அரசின் விசாரணைகளுக்கு அனைத்துலக சமூகம் தனது உதவிகளை வழங்கும். விசாரணைக்கு உதவுதல், தண்டனைகளை பெற்றுக் கொடுத்தல், குற்றவாளிகளுக்குஎதிராக தடைகளை கொண்டுவருதல் போன்ற விடையங்களில் அனைத் துலக சமூகம் காத்திரமான பங்கு வகிக்கும்.

இலங்கை அரசு மக்களின் பொருளாதார மற்றும் சமூக நலன்களை பாதிக்காதவாறு பொருளாதார சிக்கல்களை தீர்க்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் சுயாதீனமாக சாட்சியளிப்பதை உறுதிசெய்ய வேண் டும். பாதிக்கப்பட்டவர்கள் மீதான துன்புறுத்தல் கள் நிறுத்தப்பட வேண்டும். மக்களை சந்திப்பது பாதிக்கப்பட்டவர்களை சந்திப்பதில் அதிகாரிகளுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்படவேண்டும். சுயாதீனமாகவும், அனைத்துலக தரத்திற்கும் அமைவாக இருத்தல் வேண்டும்.

காணாமல் போனோர் அலுவலகத்தின் நட வடிக்கைகள் பலப்படுத்த வேண்டும். இராணுவ பிரசன்னம் குறைக்கப்படுவதுடன், பாதுகாப்பு செலவீனமும் குறைக்கப்பட வேண்டும்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## ஈழத்தமிழரை இறைமையை முன்னிலைப்படுத்திச் செயற்பட ஜி 20ம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகமும் அழைக்கிறது

"ஒரு பூமி ஒரு குடும்பம் ஒரு எதிர்காலம்" என்னும் மையப்பொருளில் இந்தியாவின் தலைமையில் இவ்வாண்டுக்கான 'ஜி20' உலகத்தலைவர்களின் உச்சிமாநாடு டில்லியில் இன்று செப்டெம்பர் 09 ஆரம்பமாகி நாளை செப்ரெம்பர் 10 நிறைவுபெறுகிறது. இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி, சீனாவின் பிரதமர் லீ கியாங், ரஸ்யாவின் வெளிவிவகார அமைச்சர் சேர்கெய் லவ்ரோவ், பிரேசிலின் ஜனாதிபதி லூலா டா சில்வா, தென்ஆபிரிக்கா ஜனாதிபதி சிறில் ரம்போசா ஆகிய 'பிரிக்ஸ்' கட்டமைப்பின் முக்கிய ஐந்து தலைவர்களும் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். மேற்குலக தலைமைகள் அணியும் இம்மாநாட்டில் பங்கேற்கின்றனர். அமெரிக்காவின் அதிபர் ஜோ பைடன், பிரித்தானியாப் பிரதமர் ரிஷி சுனாக், கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ, அவுஸ்திரேலியாப் பிரதமர் அந்தனி அல்பானிஸ் ஆகிய நான்கு ஆங்கிலமொழிவழி நாடுகளின் தலைவர்களும், மேற்குலகின் அனுசரணை நாடுகளான யப்பானின் பிரதமர் புமியோ கிஷிதா தென்கொரியாவின் ஜனாதிபதி யூன் சுக் யோல், ஆகியோரைக் கொண்டதாக இவ் அணி அமைகிறது. ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களான பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவெல் மக்ரோன், யேர்மனியின் அதிபர் ஓலாவ் ஷோலஸ், இத்தாலியப் பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி, துருக்கியின் ஜனாதிபதி தையீப் அர்துவான் ஆகியோரும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவரும் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். மற்றும் இந்தோனேசியாவின் ஜனாதிபதி ஜோகோ விடோடோ, ஆர்ஜென்டினாவின் ஜனாதிபதி அல்பேர்ட்டோ பெர்னாண்டஸ் ஆகியோரும் குறிப்பிடத்தக்க உலகத் தலைவர்களாகக் கலந்து கொள்கின்றனர். விசேட விருந்தினர்களாக சவூதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர் சல்மான், நைஜிரியாவின் ஜனாதிபதி போலா டினுபு, பங்களாதேஸ் பிரதமர் ஷேக் ஹசினா, எகிப்து மொரிசியஸ், நெதர்லாந்து, ஓமான் சிங்கப்பூர், ஸ்பெயின், சர்வதேச நாணய நிதியம், உலக சுகாதார நிறுவனம், உலக வர்த்தக நிறுவனம், உலக தொழிலாளர் நிறுவனம், உலக வங்கி, ஆபிரிக்க ஒன்றியம், உலக பொருளாதார மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் தலைவர்களும் பங்கேற்கினலறனர். கூடவே ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியா குட்டெரெஸூம் கலந்து கொள்ளும் உலகின் முக்கியமான உச்சி மாநாடாக இந்த மாநாடு அமைகிறது. இதன் தலைப்பே ஒரு பூமியென உலகை வெளிப்படுத்தி இறைமைகளின் கூட்டொருங்கு செயற்பாடே இன்றைய உலகில் உள்ளது. தனியான வல்லமை பொருந்திய இறைமையாளராக இன்று உலகில் எந்த நாடும் இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.

இங்குதான் சிக்கல் ஆரம்பமாகிறது. ஈழத்தமிழர்கள் போன்ற வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக உலகில் தொன்மையும் தொடரச்சியுமுள்ள இறைமையைக் கொண்டிருக்கும் தேசஇனங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை அவற்றின் இறைமையுடன் கூடிய வெளியக தன்னாட்சி உரிமையை இந்த மக்களின் இனங்கள் காலனித்துவ ஆட்சியின் தவறான முடிவுகளால் இழந்துள்ள நிலையில், அவற்றை காலனித்துவத்தால் தீர்க்கப்படாத உலகப் பிரச்சினையாகக் கருதி அவற்றுக்கான தீர்வை அளிக்க வேண்டிய அதனுடைய கடமைப் பொறுப்பில் இருந்து தவறுவதால் இத்தகைய மக்கள் இனங்கள் இனஅழிப்புக்கு உள்ளாகும் நிலையிலும் ஒரு பூமியாகத் தங்களை வெளிப்படுத்தித் தங்களுக்கான பாதுகாப்பான அமைதியையும் வளர்ச்சிகளையும் பெற முடியாதுள்ளனர். இத்தகைய நடைமுறை எதார்த்த நிலையில் ஒரு குடும்பம் என்னும் தகுதி உலக வல்லாண்மைகளாலும் பிராந்திய மேலாண்மைகளாலும் தீர்மானிக்கப்படுகையில் இத்தகைய மாநாடுகள் வல்லாண்மைகளும் பிராந்திய மேலாண்மைகளும் தங்கள் ஆட்சி அதிகாரங்களையும் சந்தை நலன்களையும் இராணுவத் தேவைகளையும் உறுதிப்படுத்தும் மூலவளத்தொகுதியாக ஒரு பூமியென்பதையும், அவர்களுக்கு மனித வலுவளிக்கும் ஒரு குடும்பம் என்பதையும், தங்களின் அரசுக்களின் எதிர்காலத்தையே ஒரு எதிர்காலம் என்று செயற்படுவதையுமே இந்த உச்சிமாநாடுகள் செய்ய இயலுமே தவிர இதே அரசக்கட்டமைப்புக்களால் இந்த அறிவியல் தொழில்நுட்ப எழுச்சி மிகு உலகிலேயே வாழ்வு மறுக்கப்பட்டு இனஅழிப்புக்கு உள்ளாகும் ஈழத்தமிழர்கள் போன்ற உலகின் மூத்த குடிகள் பல ஒரு பூமி ஒரு குடும்பம் ஒரு எதிர்காலம் என்னும் இந்த வல்லாண்மைகளினதும் பிராந்திய மேலாண்மைகளினதும் சொல்லாட்சிகளுக்குள் உட்படுத்தப்படவே மாட்டார்கள். இதே நிலைதான் ஒவ்வொரு ஆண்டும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை இந்த மாதத்தில் தொடக்கமுறும் பொழுதும் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகள் அடுத்து இடம்பெறும் பொழுதும் உலகின் சிறு தேச இனங்களுக்கு தொடர்கதையாகிறது.

இதற்குக் காரணம் மண்ணின் மேல் மக்களுக்கு உள்ள உரிமைதான் இறைமை என்பதையோ மக்களின் இறைமையின் விருப்பப் பகிர்விலேயே உள்ளக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் ஆளுகின்ற அரசுக்கள் உருவாகின்றன என்பதையோ அந்த அரசுக்கள் மக்களுக்கான பாதுகாப்பான அமைதியை வளர்ச்ச்சிகளை அளிக்க மறுத்து அவர்களை அடிமைப்படுத்தும் பொழுது அந்த மக்கள் உலகின் குடிகளாகவும் உள்ளனர் என்ற உண்மையின் அடிப்படையில் அவர்களது வெளியக தன்னாட்சி உரிமையை ஏற்று அடிமைப்படுத்தும் அரசில் இருந்து அம்மக்கள் விடுதலை பெற வைக்கும் பொறுப்பு இந்த உலக நாடுகளுக்கும் அமைப்புக்களுக்கும் உள்ள தலையாய கடமை என்பதையோ இந்த வல்லாண்மைகள் மேலாண்மைகள் கும்பல் மறக்கிறது மறுக்கிறது. இதுவே ஈழத்தில் 146000 மக்கள் 2009 இல் முள்ளிவாய்க்காலில் மே மாதம் 17ம் நாள் ஒரு தேசமாகவே சிறிலங்கா என்னும் இனவெறி மதவெறி மொழிவெறி அரசால் இனவழிப்புச் செய்யப்பட்ட வரலாறு உலக வரலாறாகப் பதிவாக வைத்தது. அன்றுமுதல் இன்று வரை 14 ஆண்டுகள் இனவழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பு ஈழத்தமிழர்களுக்குத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இதனை அனைத்துலக சட்டங்களின் அடிப்படையில் மாற்றியமைக்காது எந்த இந்திய மேலாண்மை ஈழத்தமிழின அழிப்புக்குச் சிங்கள ஆட்சியாளர்களுக்கு அன்றும் இன்றும் பக்கத்துணையாக நின்று தனது விருப்புக்கு ஏற்ப ஈழத்தமிழர்களின் இறைமையுடன் கூடிய தன்னாட்சி உரிமையை நடைமுறையாக விடாது தடுத்து வருகின்றதோ அந்த இந்திய அரசின் 13வது திருத்தம் என்னும் 36 ஆண்டுகளாக ஒரு எழுத்தைக் கூட நடைமுறைப்படுத்த இயலாதுள்ள அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றை ஈழத்தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கு தீர்வாக கண்ணியமான வாழ்வு தருமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரே விதந்துரைத்து தனது கடமையில் இருந்து தவறும் நிலையில் செப்டெம்பர் 11இல் தனது சிறிலங்கா குறித்த மனித உரிமைகள் ஆணையக மீள்பார்வை அறிக்கையைத் தாக்கல் செய்யப்போகின்றார். இந்தத் திசையிலேயே ஜி 20 உச்சி மாநாட்டிலும் இந்தியா ஈழத்தமிழர்களைக் குறித்த தனது கொள்கையை வெளிப்படுத்தும் என்பது உறுதியிலும் உறுதி. இந்நிலையில் ஈழத்தமிழர்கள் தங்கள் இறைமையை முன்னிலைப்படுத்தி தாங்கள் செய்யும் ஒவ்வொரு செயலையும் செய்தால் மட்டுமே தங்களுக்கான உலகின் வெளியக தன்னாட்சி உரிமையினை உறுதிப்படுத்த முடியும் என்பதே ஜி 20 மற்றும் மனித உரிமைகள் ஆணையக அழைப்பு என்பதே இலக்கின் உறுதியான நெறிப்படுத்தலாக உள்ளது. ஒவ்வொரு ஈழத்தமிழரும் இன்றைய ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் என்னும் தன்னலக் கும்பலில் இருந்து தங்களை விடுவிக்கும் தன்னலமற்ற அர்ப்பணிப்புடன் பணியாற்ற வல்ல தங்களுக்கான அரசியல் தலைமைத்துவத்தை உருவாக்க கூட்டொருங்குத் தன்மையுடன் சனநாயக வழிகளில் செயற்பட்டாலே சிறிலங்காவின் இனவழிப்பு அட்சியிலிருந்தும் அதற்கு முழுஅளவில் துணை செய்யும் வல்லாண்மைகள் மேலாண்மைகளின் பிடிகளில் இருந்தும் உலக மக்களின் துணையுடன் விடுபட முடியும். இதற்காகவே ஜி20 உச்சிமாநாட்டில் பங்குபற்றும் தலைவர்கள் பெயர்ப்பட்டியல் விரிவாகத் தரப்பட்டது. இத்தனை தலைமைகளுடனும் உலக அமைப்புக்களுடனும் தொடர்பு கொண்டு ஈழத்தமிழர்களின் உண்மை நிலையை உணர்த்த வல்ல செயற்பாட்டாளர்களாக உலக ஈழத்தமிழர்கள் தங்கள் கடமையைச் செய்ய வேண்டும் என்பதே இலக்கின் வேண்டுகோள்.

**ஆசிரியர்**

# இலங்கை அரசியலை அதிரவைத்த சனல் – 4



**அகிலன்**

ஈஸ்டர் தாக்குதல் குறித்து புதன்கிழமை இரவு சனல் 4 வெளியிட்டிருக்கும் காணொளி இலங்கை அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த பிள்ளையானின் உதவியாளராக செயற்பட்ட அசாட் மௌலானா தெரிவித்த தகவல்களை அடிப்படையாக வைத்துத்தான் இந்தக் காணொளியை சனல் 4 தயாரித்துள்ளது. பிள்ளையானுடனும் இலங்கையின் தேசியப் புலனாய்வுப் பிரிவின் தலைவரான சுரேஷ் சாலேயுடனும் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்தே அசாட் மௌலான இலங்கையிலிருந்து கடந்த வருட இறுதியில் வெளியேறியதாகச் சொல்லப்படுகின்றது.

தமிழகத்துக்குச் சென்ற அசாட் மௌலானா, பின்னர் அங்கிருந்து சுவிட்சர்லாந்துக்குச் சென்றுள்ளார். அங்கு அவர் அரசியல் அடைக்கலம் கோரியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையிலும் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் உட்பட பல்வேறு அரசியல் படுகொலைகள் குறித்து அசாட் மௌலானா சாட்சியம் வழங்கியிருக்கின்றார். பிள்ளையானுடன் பல வருடங்களாக ஒன்றாகப் பயணித்தவர் என்ற முறையில் பிள்ளையானின் செயற்பாடுகளை நேரில் அறிந்த ஒருவர் அசாட் மௌலானதான்.

ஈஸ்டர் தாக்குதல் எதற்காக நடத்தப்பட்டது, இதன் பின்னணியில் இருந்தது யார், இதற்கான தயாரிப்புக்கள் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது போன்ற பல தகவல்களை இந்தக் காணொளியில் அசாட் மௌலானா விபரிக்கிறார்.

இந்தக் காணொளியில் தோன்றும் மற்றொருவர் கால்துறை முக்கிய அதிகாரியான நிசாந்த டி சில்வா. இவர் மைத்திரி - ரணில் நல்லாட்சிக் காலத்தின் போது, முக்கியமான விசாரணைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டவர். ராஜபக்‌ஷக்களின் காலத்தில் இடம்பெற்ற லசந்த விக்கிரமதுங்க கொலை, பிரகித் எக்னெலிய கொட காணாமலாக்கப்பட்ட சம்பவம், ரக்பி வீரர் வாசிம் தாஜுதீனின் மர்மக் கொலை போன்றவை குறித்து விசாரணைகளை நடத்தி முக்கியமான தகவல்களை அவர் சேகரித்திருந்தார்.

அந்த நிலையில் ஆட்சிமாறி கோட்டாபய ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது, நிசாந்த நாட்டைவிட்டு தப்பி சுவிட்சர்லாந்தில் தஞ்சமடைந்தார். சனல் 4 காணொளியில் அவரது சாட்சியமும் முக்கியமாக இருக்கின்றது. காவல்துறையில் முக்கியமான பொறுப்பில் இருந்தவர், ராஜபக்‌ஷக்களின் செயற்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை நடத்தியவர் என்ற முறையில் அவரிடமுள்ள தகவல்களும் பெறுமதியானவை.

இந்தக் காணொளி சொல்லும் பிரதான தகவல் இதுதான்! ஈஸ்டர் தாக்குதல் ஐ.எஸ். தீவிரவாதிகளால் நடத்தப்பட்டது எனக் கூறப்பட்டாலும், ராஜபக்‌ஷக்களை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டுவருவதற்காக நன்கு திட்டமிட்ட முறையில் நடத்தப்பட்ட தாக்குதல் இது என்பதுதான் இதன் சாராம்சம். அதாவது இஸ்லாமியத் தீவிரவாதிகள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளார்கள். இலங்கை அரசியலில் அதிர்வுகளை இது ஏற்படுத்தி யிருப்பதற்கும் அதுதான் காரணம்.

### ஜெனிவாவின் கவனம்

இந்த காணொளி வெளியாயிருக்கும் தருணம் இரண்டு விடயங்களில் முக்கியம் பெறுகிறது. முதலாவது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் அடுத்த வாரம் ஜெனிவாவில் ஆரம்பமாக இருக்கின்றது. இரண்டாவதாக இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் அடுத்த வருட முற்பகுதியில் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இரண்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இந்தக் காணொளி அமைந்திருக்கின்றது.

ஜெனிவாவில் ஆரம்பமாக உள்ள ஐநா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் இலங்கையை பொறுத்தவரையில் இம்முறை முக்கியமான ஒன்றாக இருக்காது என்ற போதிலும் கூட, இலங்கை தொடர்பான அறிக்கை ஒன்று அங்கு வெளியிடப்பட இருக்கின்றது. இந்த அறிக்கை இலங்கையில் பதிலுக்காக கடந்த புதன்கிழமை கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் "காராசாரமாக" எதுவும் இல்லை என்ற போதிலும் கூட, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் முன்னெடுத்துள்ள சில அரசியல் நகர்வுகள் தொடர்பாக பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பதிமூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் அவர் வெளிப்படுத்திய கருத்துக்கள் வரவேற்பை பெற்றுள்ளன.

மறுபுறத்தில் பொறுப்பு கூறல்விடயத்தில் முன்னேற்றம் எதுவும் இல்லை என்பது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் தன்னுடைய கரிசனையை "வழமை போலவே" வெளிப்படுத்தியிருக்கின்றார். இந்த நிலைமையில் தான் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலும் பொறுப்பு கூறப்பட வேண்டும் என்பது இந்தக் காணொளி மூலமாக உணர்த்தப்பட்டு இருக்கின்றது.

ஈஸ்டர் தாக்குதலுக்கும் சர்வதேச விசாரணை அவசியம் என்பது மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதேவேளையில் பேராயர் மல்கம் ரஞ்சித் மட்டுமன்றி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சரத் பொன்சேகா ஆகியோரும் கூட சர்வதேச விசாரணையை வலியுறுத்தி பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு இந்தக் காணொளி காரணமாக இருந்துள்ளது.

அதாவது பொறுப்பு கூறல் விடயத்தை பொறுத்தவரை வெறுமனே உள்நாட்டு விசாரணை மீது நம்பிக்கை வைக்க முடியாது என்பதையும் சர்வதேச விசாரணை இதற்கு அவசியம் என்பதையும் இந்த காணொளி உணர்த்தியிருக்கின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரைணைக்கு சர்வதேச பொறிமுறை அவசியம் என்பதை பிரதான எதிர்க்கட்சிகளின் தலைவர்களே வலியுறுத்தும் நிலையில், இறுதிப்போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை விசாரிக்கவும் சர்வதேச பொறிமுறைதான் அவசியம் என்பது உணர்த்தப்படுகின்றது.

### ஜனாதிபதித் தேர்தல்

இரண்டாவதாக ஜனாதிபதி தேர்தல் அடுத்த வருடம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலைமையில், அந்தத் தேர்தலிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் இந்த காணொளி அமைந்திருக்கின்றது. கடந்த வருடம் இடம்பெற்ற "அரகலய" போராட்டத்தின் போது ராஜபக்‌ஷாக்களின் செல்வாக்கு பெருமளவுக்கு வீழ்ச்சி அடைந்திருந்தது. தமது பகுதிகளுக்கு கூட செல்ல முடியாத நிலைமை அவரது கட்சிக்கு ஏற்பட்டிருந்தது. இப்போதுதான் அவர்கள் தமது கட்சியை கொஞ்சம் கொஞ்சமாக கட்டமைத்து கொண்டு வருவதற்கு முனைந்து கொண்டிருக்கும் நிலைமையில் இந்த காணொளி வெளியாகி அவர்களுடைய நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

சனல் 4 வெளியிட்டு இருக்கும் காணொளி என்ன தான் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மைகளை வெளிக்கொண்டு வருவதாக சொல்லி இருந்தாலும் கூட, இது ராஜபக்‌ஷக்களை இலக்கு வைத்த ஒரு காணொளி என்பது வெளிப்படையாக தெரிகின்றது. இந்த காணொளி தவறான தகவல்களை தருகிறது என ராஜபக்‌ஷக்கள் எத்தனை அறிக்கைகளை வெளியிட்டாலும் கூட இதனுடைய தாக்கத்திலிருந்து அவர்கள் வெளியே வருவது இப்போதைக்கு சாத்தியமானது அல்ல.

ராஜபக்‌ஷக்களில் ஒருவர் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்து வந்த நிலைமையில்,

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# கிழக்கு மாகாணத்தின் வளங்கள் மூலமாக தமிழர்களின் பொருளாதாரம் எழுச்சிபெறவேண்டும்

மட்டு.நகரான்

கிழக்கு மாகாணத்தின் வளங்கள் பாதுகாக்கப்படவேண்டும். அந்த வளங்கள் மூலமாக கிழக்கு தமிழர்களின் பொருளாதாரம் எழுச்சி பெறவேண்டும் என்பதுடன் எதிர்காலத்தில் வடகிழக்கு இணைந்த தாயகத்தில் கிழக்கு தலைநகராக மிளிரவேண்டும். அவ்வாறானால் கிழக்கு மாகாணத்தினை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு இன்று அனைவரது கைகளிலும் உள்ளது.



இதனையே எனது கட்டுரைகள் ஊடாக தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றேன். கிழக்கு மாகாணத்தின் வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமானால் அதனை பயன்படுத்தும் உத்திகளை தமிழர்கள் முன்னெடுக்கவேண்டும். இன்று சிங்கள தேசம் வடகிழக்கினை ஆக்கிரமிப்பதற்கு முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு பிரதான காரணங்களில் இங்கு குவிந்துள்ள இயற்கை வளங்களும் காரணமாக அமைகின்றது.

இந்த இயற்கை வளங்களை பாதுகாக்கவும் இந்த இயற்கை வளங்களை எமது எதிர்கால சந்ததிக்கு கொண்டு செல்வதற்காகவும் நாங்கள் போராடிவரும் நிலையில் எமது வளங்கள் சத்தமில்லாமல் சுரண்டப்படுவதை கண்டும் காணாதவர்கள் போல் இருந்து வருகின்றோம்.

இன்று கிழக்கில் குவிந்திருக்கும் இல்மனைட் என்னும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுக்காக அமெரிக்கா, சீனா, இந்தியா என மூன்று வலயங்களாக திருகோணமலை நோக்கி தமது கால்களை பதிக்க முற்படுகின்றன.

இதுவரையில் திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமே இனங்காணப்பட்ட இல்மனைட் வளங்கள் இன்று கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும் இனங்காணப்பட்டுள்ளன. குறிப்பாக மட்டக்களப்பிலும் அம்பாறை மாவட்டத்திலும் இந்த இல்மனை வளம் கரையோரப் பகுதிகளிலும் அதிலும் தமிழர்கள் செறிந்துவாழும் பகுதிகளில் இனங்காணப்பட்டுள்ளன.



குறிப்பாக மட்டக்களப்பின் வாகரை, அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் ஆகிய பகுதிகளில் பெருமளவான இல்மனைட் கடற்கரை பகுதிகளில் இனங்காணப்பட்டுள்ள நிலையில் அவற்றினைப் பெற்றுக்கொள்வதில் போட்டிகள் நிலவுவதுடன் அவற்றினை கொள்ளையிடுவதற்காக தென்னிலங்கை சக்திகள் பெரும் முனைப்பு காட்டுகின்றன.

அண்மையில் வாகரை பகுதி மக்கள் பாரியளவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். வாகரை பகுதியில் தென்னிலங்கையினை சேர்ந்த நிறுவனம் ஒன்றிற்கு இல்மனைட் அகழ்வதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



இல்மனைட் மண் அகழப்படுமானால் பாரியளவிலான கடலரிப்புக்கு கிழக்கு மாகாணம் உள்ளாக்கப்படும் நிலைமை காணப்படுகின்றது. குறிப்பாக வாகரை பிரதேசமானது ஒரு பகுதியில் கடல் பகுதியையும் மறு பகுதியில் நீர்நிலைகளை அதிகளவாக கொண்ட பகுதி என்ற காரணத்தினால் கடலரிப்பிலிருந்து பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

இதேபோன்று அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் மற்றும் தம்பிலுவில் அதனை அண்டிய பகுதிகளிலும் இல்மனைட் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றினை வழங்குவதற்கு கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் ஆர்வம் காட்டிவரும் நிலையில் இந்த வளங்களை தமிழ் மக்கள் தமது பொருளாதார எழுச்சிக்கு பயன்படுத்தவேண்டுமே தவிர இங்குள்ள வளங்களைக்கொண்டு தென்பகுதியை சேர்ந்தவர்கள் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைவதனை நாங்கள் அனுமதிக்க முடியாது.

இவ்வாறுதான் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலத்தில் மண் கொள்ளை நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட மண் கொள்ளையினால் இன்று ஏறாவூர்ப்பற்றின் பல பகுதிகள் காணாமல்போகும் நிலையில் உள்ளதுடன் மட்டக்களப்பு மாவட்டம் பாரிய வெள்ளப் பெருக்குக்கும் ஆளாகும் நிலைமை காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் அதிகளவான காணிகளைக் கொண்ட பகுதியாகவும் இயற்கை வளங்கள் நிறைந்த பகுதியாகவும் ஏறாவூர்ப்பற்று பிரதேசம் காணப்படுகின்றது.



விடுதலைப்போராட்ட காலத்தில் ஏறாவூர்ப்பற்று காடு வளர்ப்பு திட்டங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளினால் செய்யப்பட்டு அது வெற்றிபெற்ற காரணமாக இயற்கையின் உறைவிடமாக ஏறாவூர்ப்பற்று பிரதேசம் காணப்படுகின்றது. சுமார் 695 சதுரகிலோமீற்றர் நிலப்பரப்பினைக்கொண்ட பகுதியாக காணப்படும் இப்பகுதியின் இயற்கையினை பாதுகாத்த பெருமையும் அதனை அடுத்த சந்ததிக்கு கொடுத்த பெருமையினையும் தமிழீழ விடுதலைப்புலிகள் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

ஏறாவூர்ப்பற்றின் செங்கலடி-பதுளை வீதியை மையப்படுத்தியே இந்த இயற்கை வளம் கொட்டிக்கின்றது. இதன்காரணமாக இதனை இலக்குவைத்து சிங்கள பேரினவாதம் செய்யப்படுகின்றது. இங்கிருந்தே கடந்த காலத்தில் கடுமையான மணல்கொள்ளை நடைபெற்றது. இங்கிருந்து புகையிரதத்தில் கடந்தகாலத்தில் மணல் கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டது. குறிப்பாக கொழும்பில் கடற்கரையினை நிரப்பி நகரம் அமைக்கும் சீனாவின் திட்டத்திற்கு தேவையான மணலில் அதிகளவான மணல் இந்த ஏறாவூர்ப்பற்றிலிருந்தே கொண்டு செல்லப்பட்டது.

இலங்கையில் பாதாள உலக குழுக்களின் செயற்பாடுகள் போன்று இங்கு மணல் கொள்ளையர்களின் செயற்பாடுகள் ஆபத்தானதாக மாற்றம்பெற்றது. ஏறாவூர்ப்பற்றின் பல பகுதிகள் சூறையாடப்பட்டன. இயற்கை எழில்கொஞ்சும் நீர்நிலைகள் அழிக்கப்பட்டதுடன் அவற்றினை மக்கள் பயன்படுத்தமுடியாத சூழ்நிலையேற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான மணல் கொள்ளையென்பது மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி அரசியலாக மாற்றம் பெற்றுள்ளதன் காரணமாக அதனை தடுப்பதற்கான எதிர்ப்பு அரசியல்தமிழ் தேசியமாகவேயிருந்து வருகின்றது.

அத்துடன் மைலத்தமடு,மாவதனையும் இந்த ஏறாவூர்ப்பற்று பிரதேசத்திற்குள்ளேயே வருகின்றது. மாவட்ட அபிவிருத்திக்குழுவில் குறித்த பகுதியில் உள்ள சட்ட விரோத குடியேற்றவாசிகளை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கையெடுத்தல் மற்றும் குறித்த பகுதியில் பொலிஸ் காவலரண் அமைத்தல் போன்ற முன்மொழிவுகள் செய்யப்பட்டபோதிலும் இதுவரையில் அவை நிறைவேற்றப்படாத நிலையில் அப்பகுதியில் தொடர்ந்து காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த கட்டுரையினை நான் எழுதிக்கொண்டிருக்கும் நேரத்திலும் அங்கு அத்துமீறிய குடியேற்றவாசிகள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துவருவதாக அங்குள்ள பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு சென்றதாகவும் அவர்களை அப்புறப்படுத்த நடவடிக்கையெடுப்பதாகவும் அவர் சார்பில் தெரிவிகப்பட்டது.

தமிழர்களின் வளங்கள் சூறையாடப்படுகின்றன. அந்த வளங்களை தமிழர்கள் பயன்படுத்தி முன்னேற்றம் காண்பதற்கான வழிகள் ஏற்படுத்தப்படாமல் இங்குள்ள வளங்களைக்கொண்டு தென்னிலங்கையினை வளப்படுத்தும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த வளங்கள் அழிப்பு காரணமாக தமிழர்களின் பாரம்பரிய அடையாளங்களும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இலங்கையில் “சனல் 4” காணொளி ஏற்படுத்தப்போகும் தாக்கம் என்ன?

**சனல் 4 வெளியிட்டிருக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆவணப்படம் இலங்கையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகவிருக்கும் நிலையில் வெளிவந்திருக்கும் இந்த ஆவணப்படம் சர்வதேச ரீதியாகவும் தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஜெனிவாவில் வெளியாகவுள்ள இலங்கை குறித்த ஐ.நா.வின் அறிக்கை இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் இவை குறித்து அரசியல் ஆய்வாளரும் பத்திரிகையாளருமான யதீந்திரா அவர்கள் இந்த வாரம் உயிரோடைத் தமிழின் தாயகக்களம் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு முன்வைத்த கருத்துக்களின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்**



## அரசியல் ஆய்வாளர் யதீந்திரா செவ்வி

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சனல் 4 வெளியிட்டிருக்கும் ஆவணப்படம் இலங்கையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. அரசியல் உள்நோக்கம் ஒன்றுடன்தான் இது வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்ற சந்தேகத்தை இது வெளியிடப்பட்ட தருணம் ஏற்படுத்துகின்றதா?**

உண்மையில் தற்போது சனல் 4 வெளியிட்டிருக்கும் ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பான காணொளி தான் இலங்கையில் பேசுபொருளாக இருக்கின்றது. நீங்கள் குறிப்பிட்டது போன்று வெளியிடப்பட்ட சூழல் அடுத்த ஆண்டு நாடு ஒரு ஜனாதிபதி தேறுதலை எதிர் கொள்ள தயாராகி வருகின்ற சூழலில் இப்படியான ஒரு காணொளி வெளியிடப்பட்டுள்ளது. ஏதோ உள்நோக்கம் இருக்க கூடும் என்ற கருத்து ஆங்காங்கே முன்வைக்கப்படுகின்றன. அதேநேரம் இந்த கருத்துக்களை முன்வைப்பவர்கள் அரசு தரப்பில் உள்ளவர்கள். அதேபோல் எதிரணியினர் சர்வதேச விசாரனை வேண்டும், சுயாதீனமான விசாரணை இடம்பெற வேண்டும், குற்றவாளிகள் மக்கள் முன்னால் இனம் காட்டப்படவேண்டும் என எதிர் தரப்பினர் பேசி வருகின்றனர் .

குறிப்பாக எதிர் கட்சியினருக்கு இது நல்லதோர் துருப்புச்சீட்டாக மாறி உள்ளது. ஆனால் இந்த கானொளியை பாற்கின்றபோது ஒன்று மிக தெளிவாக தெரிகிறது. இந்த கானொளி குறிப்பாக ராசபக்ச குடும்பத்தை தான் பிரதானமாக இலக்கு வைத்திருக்கிறது. அவர்கள் ஆதாரங்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ள விஷயங்கள் சாட்சியாக மாறியுள்ளது,

அவர்கள் சுட்டிக்காட்டி உள்ள தகவல்கள் எல்லாம் மீண்டும் ராசபக்ச குடும்பம் மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வரவேண்டும் என்பதுதான் இதன் சாராம்சம்

ஆகவே இதில் மிக தெளிவாக ராசபக்ச குடும்பத்தின் மீது மிக பெரிய குற்றச்சாட்டுக்களை முன்வைக்கபடுகின்றது. இது தொடர்பாக அங்கு ஒரு நபருடைய பெயர் குறிப்பிடப்பட்டு அந்த நபர் ஊடாகத்தான் ராசபக்ச குடும்பம் சம்மந்தப்படுத்தப்படுகிறது. ஆகவே இது தொடர்பான உண்மை தன்மை என்ன என்பதனை அறிய பக்கச்சார்பற்ற ஒரு சுயாதீனமான விசாரணை இடம் பெற்றால் மாத்திரம் தான் இதன்னுடைய உண்மை தன்மை நாங்கள் காணமுடியும்.

தற்போது ஒரு சில நபர்களின் கூற்றுக்களின் அடிப்படையில் தான் அந்த கானொளி வெளியிடப்பட்டுள்ளது. நிச்சயமாக இது தேர்தல் அரசியலில் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்த கூடும். குறிப்பாக கத்தோலிக்க மக்களது வாக்குகளை பெறுவதற்கு சிரமமாக இருக்கும். குறிப்பாக ராசபக்ச குடும்பங்களுடன் தங்களுடைய பெயர்களை குறிப்பிடுவோர்களுக்கு கத்தோலிக்க மக்களது வாக்குகள் இல்லாமல் போகும். அதேபோல் சிந்திக்க கூடிய மக்கள் தரப்பும் இது தொடர்பாக ஏக்கனவே வீழ்ச்சி உற்று இருக்கின்ற ராசபக்சகளை மேலும் வீழ்ச்சியுற செய்வதற்கு இதனை ஒரு துருப்புச் சீட்டாக பயன்படுத்த கூடும்.

அதேபோன்ற மற்றுமோர் பிரச்சனை முன்பு நான் கூறியதுபோல் தேர்தல் காலங்களில் பல சலசலப்பு தாக்கங்களை ஏற்படுத்தும் என்றாலும் கூட, இது வெளியிடப்பட்ட காலம் தேர்தல் நடைபெறுவதற்கு காலதாமதம் ஏற்படும் என்றால் இது எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்துமா என்ற கேள்வியும் எழுப்பி இருக்கின்றது.

அதேநேரம், இது வேற தாக்கங்களை ஏற்படுத்த கூடும் ஒரு வேளை ராசபக்சக்கள் எழுச்சி உற்றால் கூட சர்வதேச ரீதியாக ஊடாக தாக்கங்களை ஏற்படுத்த கூடும். ஏன் என்றால் இதில் இலங்கையர்கள் மாத்திரம் கொல்லப்படவில்லை . இந்த இலங்கை அரசு இயந்திரத்தை நம்பி நாட்டிற்கு வந்த ஐரோப்பியர்களும் கொல்லப்பட்டுள்ளனர். ஆகவே மீண்டும் ராசபக்சக்கள் எழுச்சி உற்றாலும் கூட இந்த நாட்டில் யார் ஆட்சிக்கு வந்தாலும் பொருளாதார த்தில் இருந்து மீள்வதற்கு நிச்சயமாக சர்வதேச ஒத்துழைப்பு இன்றி அவை நடைபெறாது. ஆகவே நம்பிக்கைக்கு அல்லது நம்பிக்கையை பெறமுடியாத ஒரு தரப்பு ஆட்சியில் இருக்கும் பட்சத்தில் இந்த காணொளி ஒரு துருப்புச் சீட்டாக சர்வதேச அரங்குகளில் பயன்படுத்த படக் கூடும்.

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சர்வதேச விசாரணை ஒன்று அவசியம் என்ற கோரிக்கைக்கு வலுச் சேர்ப்பதாக இந்த ஆவணப்படம் அமைந்திருக்கின்றது. அதற்கான-அதாவது சர்வதேச விசாரணை ஒன்றுக்கான சாத்தியங்களை இது ஏற்படுத்துமா?**

உண்மையில் இந்த கானொளியின் அடிப்படையில் பார்ப்பதாக இருந்தால் அப்படியான வாய்ப்புக்கள் மிகவும் குறைவு ஏன் என்றால் கானொளியில் ஆசாத் மௌலானா என்பவர்தான் பிரதான சாட்சியாக உள்ளார். ஏக்கனவே அவரின் கூற்றுப்படி அவரும் இதில் இணைந்து பயணித்த நபர் என்று அவரே ஒப்பு கொள்கிறார். அவர் ஆரம்பத்தில் கருணாவுடன் இருந்தவர், பின் பிள்ளையானுடன் இருந்தவர். அதற்கு மேலாக அவருடைய கூற்றின் படி ராணுவ புலனாய்வு பிரிவில் சேர்ந்து இயங்கியதாக அவரே கூறுகின்றார். அந்த வகையில் கானொளியின் அடித்தளமே இவரது கூற்றுத்தான். ஆனால் இதை ஒரு வலுவான சான்றாக கொண்டு சர்வதேச விசாரனை இடம்பெறுமா என்பது ஒரு கேள்விக்குறி. ஆனால் இரண்டாவது விடையம் இந்த கானொளி தொடர்பாக ஒரு சர்வதேச விசாரனை அவசியம் என்பதை இந்த கானொளி தற்போது சர்வதேச அரங்குகளில் அதைப்பற்றிய உரையாடல்களை ஏற்படுத்துவதற்கு ஒரு கருவியா இப்பொழுது பயன்படுத்த முடியும்.

ஆனால் இதை தொடர்ந்து எந்தளவு தூரம் சர்வதேச அரங்குகளில் பேசுபொருளாகும். இது எந்தளவு தூரம் குறிப்பாக ஐக்கிய நாடுகள் இப்பொழுது ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரும் இதற்கு ஒரு விசாரணை அவசியம் என்பதை வலியுறுத்தி இருக்கிறார். இந்த விடையம் சர்வதேச அரங்கில் முக்கிய பேசுபொருளாக மாறுகின்ற பொழுது இது தொடர்பில் ஒரு சில அழுத்தங்கள் இலங்கை மீது ஏற்படலாம். இதுவரையில் தமிழர்களுக்கு கொடுக்கப்பட்ட அழுத்தங்களுக்கு மாறாக இருக்கலாம். ஏன் என்றால் இதில் ஐரோப்பியர்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஆகவே சர்வதேச விசாரனை உடனடியாக நடைமுறை படுத்தப்படுமா என்றால் நிச்சயமாக நடாத்தப்பட போவதில்லை. ஆனால் சர்வதேச விசாரனை அல்லது சர்வதேச கவன குவிப்பு என்பதை நோக்கி இதை ஒரு துருப்புச் சீட்டாக பயன்படுத்தலாம்

**ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகவிருக்கும் பின்னணியில் இந்த ஆவணப்படம் வெளிவந்திருக்கின்றது. ஜெனிவாவில் இது தாக்கத்தை ஏற்படுத்துமா?**

ஜெனிவாவில் உண்மையில் இது ஒரு இலங்கை சம்மந்தப்பட்ட விடையமாக மாத்திரம் பாற்கப்படாது. உண்மையில் இது ஒரு தற்கொலைக் குண்டு தாக்குதல். இந்த தாக்குதல் இடம் பெற்ற பிறகு சர்வதேச உளவுத்துறை கூட குறிப்பாக அமெரிக்கா உள்ளக உழவுத்துறை கூட இலங்கைக்கு வந்து சென்றது. இப்படியான பின்னணியில் இது ஒரு சர்வதேச கவனத்தை பெற்ற விடையம். இது ஒரு நாடுகடந்த பயங்கரவாத விடையம்.

இந்த பின்னணியில் இவ்வாறான

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இலங்கை இனமோதலில் இலங்கை வரலாற்றின் முக்கியத்துவமும் இலங்கை அரசின் வரலாற்று பாடவிதானங்களில் பொய்களும் திரிபுகளும் மறைப்புகளும்

இலங்கை இனமோதலின் அடிஅத்திவாரமாக விளங்குவது இலங்கை வரலாறு தொடர்பான தமிழர்களின் உண்மைகளுக்கும் சிங்களவர்களின் பொய்களுக்குமிடையிலான மோதலாகும். இலங்கையின் புராதன நாகரீகம் என்பது சங்கத்தமிழ் நாகரீகமாகும். ஆனால் ஆட்சி அதிகாரத்தை கையில் வைத்துள்ள சிங்கள ஆட்சியாளர்கள், இராணுவ பொலிஸ் பலத்துடன் அனைத்து வளங்களையும் இலங்கை முழுவதிலும் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பின் கீழ் கொண்டு வந்து இலங்கையை முழுமையான சிங்கள பௌத்த நாடாக மாற்றியமைக்கும் வேலைத்திட்டங்களை காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட நாள் முதல் செயற்படுத்தி வருகின்றனர்.



இலங்கைத்தீவு முழுவதையும் சிங்கள பௌத்த மயமாக்கும் பல்முறை வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு தமிழர்களின் போராட்டம் தடையாக அமைந்ததால் அவர்களது வேலைத் திட்டமென்பது சமாந்தரமாக இரண்டு பெரும் பிரிவாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. தமிழர்களின் இருப்பை, அடையாளங்களை, தொன்மையை அழித்தொழிப்பது. மற்றையது வடக்கு கிழக்கை சிங்கள பௌத்த மயமாக்கும் செயற்றிட்டங்களை தொடர்ச்சியாக செயற்படுத்துவது. இதில் தமிழ் மக்களின் இருப்பை ஒழிப்பதில் அவர்களது உயர்கல்வி வாய்ப்புக்களைப் பறிப்பது, அவர்களுடைய வேலை வாய்ப்புகளைப் பறிப்பது இவற்றின் மூலம் மக்களை நாட்டை விட்டு ஓடச் செய்தல் என்பது ஒரு வழிமுறையாக *70*களிலிருந்து செயற்படுத்தப்படுகிறது.

இவற்றை செயற்படுத்த சிங்கள மக்களை தயார் செய்ய வேண்டும். அதற்கு சிங்களத் தேசியவாதத்தை கட்டி எழுப்ப வேண்டும். உண்மையில் சங்கத்தமிழ் நாகரீகமே புராதன நாகரீகம் என்பதாலும் தமிழ் மக்களே இலங்கையின் பூர்வீகக் குடிகள் என்பதாலும் சிங்கள தேசியவாதத்தைக் கட்டியெழுப்புதல் இலகுவானதல்ல. ஏனெனில் தேசியவாதத்துக்கான உள்ளீடுகளில் அவர்களது பூர்வீகம், தனித்துவமான கலாச்சாரம், வரலாற்றுச் சான்றுகள், பெருமைகள் போன்ற பலவிடயங்கள் அவசியமாகின்றன.




எனவே சிங்களவர்களின் தொன்மை பற்றியும் பௌத்தத்தின் பெருமை பற்றியும் பொய்களையும், கட்டுக்கதைகளையும், மாயைகளையும் வரலாற்று உண்மைகள் போல சிங்கள மக்களுக்கு போதித்து சிறுவயதிலிருந்தே அதனை நம்பவைத்து சிங்கள பௌத்த தேசியவாதத்தை கட்டியெழுப்ப வேண்டிய நிர்ப்பந்தத்தில் சிங்கள பௌத்த தேசியவாதம் செயலாற்றி வருகின்றது. காலனித்துவத்தின் பின் ஆட்சி அதிகாரம் சிங்களவர்களின் கைகளுக்கு மாறியதாலும் ஆட்சியதிகாரத்தை பயன்படுத்தி ( துஸ்பிரயோகம் செய்து) வரலாற்று பாடவிதானங்களில் தமிழர்களின் தொன்மையையும், இலங்கையை பாதுகாப்பதிலும் இலங்கையை கட்டியெழுப்புவதிலும் காலனித்துவவாதிகளிடமிருந்து விடுவிப்பதிலும் அவர்களது பங்களிப்பையும் மறைத்து பொய்யான வரலாறு கற்பிக்கப்படுகிறது.



**கல்வியை தாக்குதலிலிருந்து பாதுகாப்பதற்கான சரவதேச தினமான செப்ரெம்பர் 9 தொடர்பாக கொழும்பு பல்கலைக்கழக அரசியல், சர்வதேச அரசியற்துறை முன்னாள் விரிவுரையாளரும் வடக்கு மாகாணசபையின் முன்னாள் கல்வி அமைச்சருமான கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அவர்கள் எழுதிய கட்டுரை.**

தமிழ் மன்னர்களின் பெயர்களை சிங்களப் பெயர் போல் மாற்றுவது உ+ம் தேவநம்பியதீசன் என்ற சங்கத்தமிழ் மன்னன் அவனது தந்தை பெயர் மூத்தசிவன். கி.மு. *300*ஆம் ஆண்டுகளில் ஆட்சி புரிந்தான். அவனது காலத்திலேயே அசோகச்சக்கரவர்த்தியின் மகன் மகிந்தாவும் மகள் சங்கமித்திரையும் இலங்கைக்கு வந்து



தேவநம்பியதீசனை மதமாற்றம் செய்தனர். ஆனால் அவனது பெயரை திஸ்ஸ என வரலாற்று நூல்களில் குறிப்பிடுகின்றனர். இதுபோன்றே யாழ்ப்பாண இராட்சியத்தை ஆண்ட செண்பகப் பெருமாள் என்ற தமிழ் மன்னரின் பெயரை சப்புமல்குமார என சிங்களப்பெயர் போல வரலாற்று நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். இது போன்றே யாழ்ப்பாணத்தை யாப்பாபட்டுன என்றும் பல்வேறு தமிழ் ஊர்களின் பெயர்களை விரும்பியவாறு சிங்களக் குடியேற்றங்கள் மூலமும் பெயர் மாற்றம் செய்து நூல்களில் இடம்பெறச் செய்துள்ளனர். தமிழ் மக்களைச் சிறுமைப்படுத்தும் விதத்தில் தாழ்ந்தவர்கள், வந்தேறு குடிகள் என்ற சாரப்பட பல இடங்களில் வரலாற்று பாடவிதானங்களில் பதியப்பட்டு மாணவர்கட்கு கற்பிக்கப்படுகிறது.



இந்தியாவையும் தமிழர்களையும் எதிரிகளாகக் காட்டும் வகையில் சிங்கள தேசத்துக்கெதிராக *24*முறை தென்னிந்தியப் படையெடுப்பு நடந்ததாகவும் அதன் மூலம் வந்தவர்களே தமிழர்கள் என்றும் வரலாறு புனையப்படுகின்றது. வெகுசிலவே நாடு பிடிக்கும் படையெடுப்பினடிப்படையில் நடைபெற்றன. பெரும்பாலானவை இரு சிங்கள மன்னர்கள் யுத்தம் புரியும்போது ஒருவர் சோழனின் உதவியை நாடுவதும் எதிர்த்தரப்பு பாண்டியனின் உதவியை நாடுவதும் இவர்களுக்கு ஆதரவாக படைகள் வருவதுமே நடந்தது. வந்தவர்களில் பெரும்பாலான படையினரை இங்கேயே தங்க வைத்ததும் உண்டு. சோழன், பாண்டியன் தமிழர் என்பதால் தமிழர்களை இந்தியர் என்றும் சிங்கள விரோதிகள் என்றும் சித்தரிக்கும் வரலாறுகள் சாதாரண மக்கள் மத்தியில் ஜனரஞ்சக எழுத்தாளர்களால் பரப்பப்படுகின்றது.

இனமோதலுக்கு தீர்வு காண்பதில் முன்னெடுப்புகள் நடைபெறும் போதெல்லாம் இன ஒற்றுமையை வளர்க்கும் நோக்கில் பல வெளிநாடுகள் பாடநூல்களில் தமிழர்களுக்கெதிராக, அவர்களைச் சிறுமைப்படுத்தும் வகையில் அமைந்த மற்றும் தவறான வரலாற்றுப் பதிவுகளை நீக்குவதற்கான திட்டங்களை முன்னிலைப்படுத்தி பெருமளவு நிதியை செலவழித்த போதும் சிங்கள கல்விச் சமூகம் அந்த நிதியை ஏப்பம் விட்டு இவற்றைச் செய்து முடிக்காமல் ஏமாற்றிய வரலாறும் உண்டு. உ+ம் சந்திரிக்கா ஆட்சியில் ஒருபுறம் தீர்வுப்பொதி வேலைகளும் மறுபுறம் தமிழ் மக்களுக்கான தீர்வை சாதாரண சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்ள வைக்கின்ற நோக்கிலான செயற்பாடுகளைக் கொண்ட வெண்தாமரை இயக்கம், சிங்களவர்களால் எரிக்கப்பட்ட யாழ் பொது நூலகத்தை எரியூட்டியது தவறு என்பதை சராசரி மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக 'புத்தகமும் செங்கல்லும்' என்ற இயக்கம் என பல நடந்தன. சமாந்தரமாக நோர்வேயின் பெருமளவிலான நிதியுதவியுடன் நீதி அமைச்சின் கீழ் தேசிய ஒருமைப்பாட்டு செயற்றிட்டம் *(National Integration Program Unit)* என்ற அமைப்பு பல வருடங்கள் செயற்பட்டது. அதில் ஓர் முக்கிய திட்டம் பாடநூல்களில் மேற்கண்ட மாற்றங்களைச் செய்வது. இதற்கான

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# சிங்கள பௌத்தத்தின் பிடியில் சிக்கியிருக்கும் லைகா



துரைராசா ஜெயராஜ்

சிறீலங்கா எனும் சிங்கள பௌத்த தேசம் என்றுமில்லாத பொருளாதார சரிவில் வீழ்ந்து கிடக்கின்றது. இந்தப் பொருளாதார வீழ்ச்சியானது நாட்டின் அரசியல் பலத்தையும், பௌத்த மேலாதிக்கப் பலத்தையும் சற்றுத்தளம்பலடையச் செய்திருக்கின்றன. சிங்களவர்கள் முதற்தடவையாகப் பசியின் கோரத்தை உணரத் தொடங்கியிருக்கின்றனர்.

இந்த சரிவைப் பயன்படுத்திக்கொண்டு, புவிசார் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக இலங்கையைப் பயன்படுத்திக்கொள்ளும் நாடுகள், வணிக பலமுடைய அமைப்புகள், சர்வதேச தொண்டு நிறுவனங்கள் இந் நாட்டிடமிருந்து எவற்றையெல்லாம் பிடுங்கிக்கொள்ள முடியுமோ அவற்றையெல்லாம் பறித்துக் கொண்டிருக்கின்றன. தமது கால்களை அகலப் பதிக்கின்றன. நாட்டின் வடக்கு கிழக்கில் இந்தியாவும், தெற்கு மேற்கில் சீனாவும் வைப்பதே சட்டமாக மாறிக் கொண்டிருக்கின்றது.

எனவே இந்த சிக்கல்களில் இருந்து தப்பித்துவரவும், சிங்கள பௌத்த தேசத்தைக் காப்பாற்றிக்கொள்ளவும் ஏதாவது ஒரு துருப்புச் சீட்டை சிங்கள ஆட்சியாளர்கள் தேடிக்கொண்டிருக்கின்றனர். அந்தத் துருப்புச் சீட்டானது இதுவரை காலமும் ஈழத்தமிழர்களின் பிணமாக இருந்தது. அதாவது ஈழத்தமிழர்களை இனப்படுகொலைசெய்து கொன்றொழித்து அந்தப் பிணங்களை வைத்துப் பிச்சையெடுத்து தம்மை வளப்படுத்திக்கொண்டனர். எனவே சிங்களவர்களுக்கு கிடைத்திருக்கும் அடுத்த துருப்புச்சீட்டு, புலம்பெயர் ஈழத் தமிழர்களிடம் இருக்கும் பணம். இந்நாட்டில் வாழவே முடியாதெனப் புலம்பெயர்ந்து, ஐரோப்பிய பனியிலும், குளிரிலும் உழைத்துத் தேடிய பணம் அது.



அந்தப் பணத்தை இலக்குவைத்து, "புலம்பெயர்ந்தவர்களின் முதலீடுகள்" என்ற பெயரில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தனர். இனப்படுகொலையாளி கோட்டபாய ராஜபக்ச ஆரம்பித்த இந்த வேலைத்திட்டத்தை நம்பி யாரும் கால்வைக்கவில்லை. எனவே அவர் அதில் தோற்றதோடு, அவரது ஆட்சியும் தோற்றுப் போனது. அவருக்கு அடுத்த சிங்கள பௌத்த மேலான்மைவாத அரியணைக்கு ஏறிய ரணில் விக்கிரமசிங்க, நேரடியாகவே புலம்பெயர் தமிழர்களை இலக்குவைத்தார். ரணில் நல்லவர், பொறுமையாக உரையாடக்கூடியவர், இணங்கிப் போகக்கூடியவர் என நம்பிக்கொண்டிருக்கும் புலம்பெயர் தமிழர் தரப்புக்களை பல்வேறு குழுக்களின் ஊடாக நாடினர். தந்திரமாக சிறீலங்காவுக்கு அழைத்து வந்து ராஜமரியாதை அளித்தனர். தம் சொந்த உறவுகளைக் கொன்றொழித்த இராணுவமே விழுந்துவிழுந்து தமக்குப் பணிவிடைகள் செய்து, வளைந்து நெளிந்து நிற்பதைப் பார்த்த மேற்குறித்த புலம்பெயர் தமிழர்கள் மெய்சிலிர்த்துப் போனார்கள். இதில் கவரப்பட்ட புலம்பெயர் தமிழ் ஒரு தனவந்தர், நெடுந்தீவில் உள்ள வெடியரசன் கோட்டையைப் பாதுகாப்பதற்கான மொத்த நிதியையும் தானே தருவதாகத் தொல்லியல் திணைக்களப் பணிப் பாளரிடம் வாக்குறுதியளித்தார். ஆனால் சமநேரத்தில், வெடியரசன் கோட்டையைச் சிங்கள பௌத்தமயமாக்குவதில் கறையானைப் போல செயற்பட்டுக்கொண்டிருந்தது சிறீலங்கா கடற்படை. அதேவேளை கனடா முதலான நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களை இலக்குவைத்து, அங்குள்ள இலங்கையின் தூதரகத்தின் ஊடாக பல்வேறு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்காக உருவாக்கப்பட்டுள்ள கனடா – இலங்கை வர்த்தக அமைப்பு கூட உருவாக்கப்பட்டுள்ளது.



இப்படியாக நாட்டை மீட்பதற்கான புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகள் என்ற பெயரில் பலர் நாட்டுக்கு அழைக்கப்பட்டார்கள். இராணுவப் பாதுகாப்போடு வடக்கு, கிழக்கு முழுவதும் வலம்வந்தார்கள். இந்த முன்னேற்றம் படிப்படியாக வளர்ந்து, ஐரோப்பாவில் புலம்பெயர் நிதியியல் அடையாளமாக மாறிவிட்ட லைகா விடம் சென்றுசேர்ந்தது.

இலங்கையின் அரச தொலைக்காட்சி, அரச இணைய சேவை முதலானவற்றையும், சிங்கள சினிமாவில் சில படங்களுக்கான தயாரிப்பு செலவையும் தற்போது லைகா பொறுப்பேற்றிருப்பதாக சிங்கள ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. அதற்காக லைகா நிறுவனத் தலைவர், அவரது பாரியார் உள்ளிட்டவர்களுக்கு பௌத்த பிக்குகள் அமோக வரவேற்பை வழங்கிய காணொளி ஒன்றும் சமூகவலைதளங்களில் பகிரப்பட்டு வருகின்றது.

இலங்கையின் தொலைக்காட்சி அலைவரிசை முழுக்கமுழுக்க இனவாத மயப்பட்டது என்பதை தமிழ் குழந்தையும் அறியும். அதற்குள் மலிந்திருக்கும் ஊழல்களும், பாலியல் சுரண்டல்களும், இனத்துவேசமும் அத் தொலைக்காட்சியை வளரவிடாமல் செய்திருக்கிறது. எதற்கெடுத்தாலும் தொழிற்சங்கப் போராட்டங்களில் குதிக்கும் நிலையில் இருக்கும் சிறீலங்காவில், லைகா நினைத்த மாத்திரத்திற்கு எவ்வித மாற்றங்களையும் தான் முதலீடு செய்திருக்கும் தொலைக்காட்சிக்குள் மேற்கொள்ள முடியாது. அந்தத் தொலைக்காட்சி அப்படியேதான் இருக்கப்போகிறது. அதன் கொள்கையும் அப்படியேதான் இருக்கப்போகின்றது.

உண்மையில் சிறீலங்காவின் இந்தப் பொருளாதார வீழ்ச்சியைப் பயன்படுத்தி லைகா பல வேலைகளைச் செய்திருக்கலாம். சீனாவாகட்டும், இந்தியாவாகட்டும், அதானி குழுமமாகட்டும் அனைவருமே தம் நலன்களை அடையவே தற்போது இலங்கையைப் பயன்படுத்துகின்றனர். அதையேதான் லைகாவும் செய்திருக்க வேண்டும். இனப்பிரச்சினை தீர்வு, காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி, நில ஆக்கிரமிப்பு, தீவிரமடைந்திருக்கும் பௌத்தமயமாக்கல், வடக்கு, கிழக்கில் அதிகரித்திருக்கும் இராணுவமயமாக்கல் எனத் இலங்கை அரசு பொறுப்புச் சொல்லவேண்டிய பல விடயங்கள் தமிழர் பக்கமிருக்கின்றன. இவை எவையும் லைகாவிற்குத் தெரியாத விடயங்களுமல்ல. எல்லாமே தெரிந்திருந்தும், எவ்வித இனப்பொறுப்புமின்றி, வெறும் வியாபாரத்திற்காக பௌத்த பிக்குகளின் காலில் விழுந்து கிடக்கிறது லைகா. கண்டிய நடனமும், குனிந்து நின்று சேவகம் செய்யும் இராணுவமும், கைலாகு கொடுத்து வரவேற்கும் சிங்கள அரசியல்வாதிகளும், முதற்கணம்வரை இனவாதம் கக்கிக்கொண்டிருந்த பௌத்த பிக்குமாரின் பிரித் ஓதல்களும் லைகாவிற்குத் தற்போது இதமாக இருக்கின்றன. இந்த இதம் நீடித்திருக்க வாய்ப்பேயில்லை. தமிழர்கள் சிறிலங்காத் தீவில் 1948 ஆம் ஆண்டிலிருந்து பட்டுணர்ந்த பாடங்களின் படி, தம் தேவை முடிந்ததும் சிங்களவர்களின் குணம் மாறிவிடும். பௌத்த சிங்களத் தேசாபிமானம் நாடிநரம்பெல்லாம் பீறிட வீதியில் இறங்கும் பௌத்த பிக்குகளும், சரத் வீரசேகர, உதய கம்மன்பில, விமல் வீரவன்சக்களும் ஒரே நாளில் லைகாவின் தேன் நிலவுக்கு முடிவுகட்டிவிடுவர்.

ஆகவே லைகா இத்தீவில் லாபமீட்டும் நோக்குடன் செய்யும் அத்தனை கோடி முதலீடுகளும் மீளவரப்போவதில்லை. அதனை யாரும் மீளவழங்கவும் போவதில்லை. சிங்கள தேசம் லைகாவைத் தன் தேவைக்குப் பயன்படுத்திக் கொண்டு, தேவை தீர்ந்ததும், இன்று கண்டிய நடனமாடி, பிரித் ஓதி வரவேற்ற அதே பௌத்த தேரர்களைக் கொண்டே அடித்தும் விரட்டும்.

இன்று ஒருபுறத்தில் லைக்காவிற்கு பிரித் ஓதி, செங்கம்பள வரவேற்பளித்த அதே பௌத்த தேரர்கள், மறுபுறமாக முல்லைத்தீவிலும், யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும், திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும், அம்பாறையிலும் தமிழர் நிலத்தை அபகரித்து பௌத்த விகாரைகள் அமைப்பதில் இரவு பகலாக உழைக்கின்றனர். வேண்டத்தகாத இழிவு வார்த்தைகளால் தமிழர்களை நோக்கிப் பேசுகின்றனர். பல்லாயிரக் கணக்கான தமிழர் காணிகளை பௌத்த மரபுரிமை மேம்பாட்டுக்காக அபகரித்துக் கொண்டிருக்கின்றனர். எனவே லைக்கா மாதிரியான புலம்பெயர்தமிழ் முதலீட்டாளர்கள் இந்த விடயத்திலும் கவனம் செலுத்துதல் வேண்டும். தாம் உதவ முன், தாம் முதலிட முன் அந்த முதலீடுகள் எத்தகைய வேலைத்திட்டங்களுக்கு செல்லப்போகின்றன என்ற விடயத்திலும் அக்கறை கொள்ள வேண்டும்.

இந்த வருடத் தொடக்கத்தில் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு விடயத்திலும், இவ் வருடத்தில் விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக ஆளுக்கு தலா 25 லட்சம் ரூபா வரை வழங்கிய

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

# ஆணாதிக்க சமூகம்

துரைசாமி நடராஜா

இலங்கையின் மலையக பெருந்தோட்டப் பெண்கள் நாட்டின் தேசிய வருவாயை ஈட்டிக் கொடுப்பதில் கணிசமான வகிபாகத்தினைக் கொண்டுள்ளனர். எனினும் இவர்களின் வாழ்க்கை நிலைமைகள் திருப்தியற்றதாகவே காணப்படுகின்றன. ஆணாதிக்க சமூகத்தில் இவர்களின் உரிமைகள் பலவும் மறுக்கப்பட்டு வரும் நிலையில் வாயில்லாப் பூச்சிகளாக பல பெண்கள் மனதுக்குள் குமுறிக் கொண்டிருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்நிலையில் மலையகப் பெண்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டு தேசிய நீரோட்டத்தில் அவர்கள் இணைந்து செயற்படுவதற்கான கதவுகள் திறக்கப்படுதல் வேண்டும். இதற்கென அனைத்து தரப்பினரும் ஒன்றுபட்டு குரல் கொடுப்பது அவசியமாகும்.

“பெண்கள் இல்லா வீடு பேய் வீடு” என்று கிராமத்து வழக்கில் கூறுவார்கள். அந்தளவிற்கு பெண்களின் பெருமை ஓங்கி நிற்கின்றது. பெண்கள் சமூகத்தின் கண்களாவர். குடும்பத்தின் குத்துவிளக்காக திகழும் இவர்கள் குடும்பம், சமூகம், நாடு என்று சகல மட்டங்களிலும் அச்சாணியாக விளங்குகின்றார்கள். இந்நிலையில் பெண்களை புறந்தள்ளும் எந்தவொரு சமூகமோ அல்லது நாடோ அபிவிருத்தி கண்டதாக சரித்திரமே இல்லை என்பது புத்திஜீவிகளின் கருத்தாகும். இந்த வகையில் நாட்டின் ஏனைய இனத்து பெண்களுடன் ஒப்பிடுகையில் மலையக பெருந்தோட்டப் பெண்கள் மிகவும் ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருவது வேதனைக்குரியதாகும். கூடிய நேரம் வேலை செய்து குறைந்தளவு ஊதியத்தை பெற்றுக் கொள்ளும் இவர்கள் ஆணாதிக்க சமூகத்தில் கட்டுண்டு தமது பல்வேறு உரிமைகளும் மழுங்கடிக்கப்பட்ட நிலையில் இருந்து வருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும். பேராசிரியை குமாரி ஜெயவர்த்தனா *1984* இல் ஒரு ஆய்வுக்கட்டுரையை வெளியிட்டிருக்கின்றார். இக்கட்டுரையில் பொதுவாக பெண்கள் தொடர்பாக பல்வேறு விடயங்களை முன்வைத்திருக்கின்றார். இதன்படி உலகளாவிய ரீதியில் பெண்கள் தொடர்பான ஒரு தனியான பௌதீக வாழ்க்கைச் சுட்டெண் கணிப்பிடப்படுமாயின், இலங்கை மிக உச்ச கட்டத்தை பெற்றிருக்கும். பெண் கல்வியறிவு மட்டம் *82* வீதம், பிரசவ இறப்பு வீதம் ஆயிரத்திற்கு *12* வீதம்



என்று சுட்டிக்காட்டியுள்ளதோடு, இச்சுட்டெண்கள் ஆசியாவிலேயே மிகச் சிறப்பான நிலைமைகளைப் பிரதிபலிப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். எனினும் இலங்கைப் பெண்களுக்குள்ளும் இலங்கையின் தந்தைவழி சமுதாய அமைப்பினால் புறக்கணிக்கப்பட்ட பெண்கள் கூட்டம் ஒன்று இருக்கவே செய்கின்றது. அதில் பெருந்தோட்டப் பெண்கள் மிகுந்த புறக்கணிக்கணிப்பிற்கு ஆளானவர்களாவர் என்பதையும் குமாரி ஜெயவர்த்தனா எடுத்துக்காட்டியிருக்கின்றார். இப்புறக்கணிப்பு நிலை இன்னும் முற்றுப்பெற்றதாக இல்லை. அவர்களின் துன்ப துயரங்கள் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை. இதிலிருந்தும் மீள்வதற்கான வழிவகைகளின்றி அவர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

### மாற்றுத் தொழில் முயற்சி

மலையகப் பெண்கள் நாட்டின் தேசிய வருவாயில் அதிகளவான பங்களிப்பினை வழங்கி வருகின்றனர். பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறையை எடுத்துக் கொண்டால் இவர்களின் பங்களிப்பின்றி இத்தொழிற்றுறையை கொண்டு நடாத்துவது மிகவும் கடினமான ஒரு காரியமாகும். எனினும் இவர்கள் மீதான தொழில் ரீதியான கெடுபிடிகள் குறைவின்றி நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதனால் சில பெண்கள் தோட்டத் தொழிற்றுறையை விடுத்து மாற்றுத் தொழில்களை நாடிச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. தோட்டத் தொழிற்றுறையின் வீழ்ச்சிக்கு கம்பனியினரின் இத்தகைய கெடுபிடிகள் உந்துசக்தியாக இருக்கின்றன. மலையகப் பெண்களில் பெரும்பாலானோர் தாம் உழைக்கும் பணத்தை கணவனிடம் கொடுத்துவிட்டு தமது தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள ஐந்துக்கும் பத்துக்கும் கணவனிடம் கையேந்தி வாழ்வதனை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதேவேளை தோட்டத் தொழிற்றுறையில் கடுமையான நெருக்கீடுகளுக்கும் மத்தியில் தொழில் புரியும் பெண்கள் வீடு திரும்பிய பின்னர் வீட்டு வேலைகளிலும் தன்னை அதிகமாக அர்ப்பணித்துக்கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலை மேலோங்கி காணப்படுகின்றது. கணவர் மற்றும் பிள்ளைகளின் தேவைகளை



நிறைவேற்றுவதிலேயே இப்பெண்களின் காலம் கழிந்து விடுகின்றது.

தமது குடும்பத்தை சிறப்பாக வாழவைக்கும் நோக்கில் மலையகப் பெண்களில் சிலர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்று பணத்தை உழைத்தனுப்புவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். இவ்வாறு உழைத்தனுப்பும் பணத்தை சில ஊதாரிக் கணவர்கள் குடித்துக் கும்மாளமிட்டு வருவதும் புதிய விடயமல்ல. இதனால் குடும்பம் கண்ணீரில் தள்ளாடுவதோடு பிள்ளைகளின் கல்வி ரீதியான செயற்பாடுகளும், அன்பு, பாதுகாப்பு போன்ற பல விடயங்களும் கேள்விக்குறியாகும் நிலையில் பிள்ளைகளின் எதிர்காலமும் சூனியமாகி விடுகின்றது. இத்தகைய பெற்றோரின் சில பிள்ளைகள் நெறிதவறும் வாய்ப்புகளும் அதிகமுள்ளன. இளவயதுத் திருமணங்கள் மலையகத்தில் அதிகரிப்பதற்கும் இத்தகைய நிலைமைகள் அடிப்படையாக அமைந்துவிடுகின்றன என்பதனையும் கூறியாக வேண்டும்.

மலையக யுவதிகளில் பலர் ஆடைத் தொழிற்சாலைகளில் தொழில் புரிந்து வருகின்றனர். இவர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கின்றதா என்பது சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாக உள்ளது. இதேவேளை நகர்ப்புற வர்த்தக நிலையங்கள், எஜமானர்களின் வீடுகள் போன்றவற்றிலும் பெண்கள் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் உரிமைகளை உரியவாறு உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அரச சார்பற்ற நிறுவனங்களும், தொழிற்சங்கங்களும் அடிக்கடி வலியுறுத்தி வருகின்றன. கடந்த மேதினத்தின் போதும் இதற்கான குரல் ஓங்கி ஒலித்தமையும் நோக்கத்தக்கதாகும். எனினும் உரிய சாதக விளைவுகளை இன்னும் மலையகப் பெண்கள் பெற்றுக் கொள்ளவில்லை என்பதும் தெரிந்த விடயமாகும்.

### அரசியல் பிரதிநிதித்துவம்

சமூக அபிவிருத்தியில் அரசியல் பிரதிநிதித்துவம் மிகவும் இன்றியமையாததாக விளங்குகின்றது. பின்தங்கிய பல சமூகங்கள் அரசியல் பிரதிநிதித்துவத்தின் சிறப்பான செயற்பாடுகள் காரணமாக முன்னிலைக்கு வந்திருப்பதோடு தேசிய நீரோட்டத்திலும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளன. இந்த வகையில் மலையக சமூகம் பல்வேறு அபிவிருத்திகளை பெற்றுக் கொள்வதற்கும் அரசியல் பிரதிநிதித்துவம் மிகவும் அவசியமாகின்றது. இந்த வகையில் இந்திய வம்சாவளி மக்களின் சனத்தொகைக்கேற்ப உரிய அரசியல் பிரதிநிதித்துவம் இல்லை என்றவொரு குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது. அதிலும் மலையகப் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் மிகவும் கீழ் நிலையில் உள்ளது. உள்ளூராட்சி மன்றங்களில் ஓரளவு பெண் பிரதிநிதித்துவம் காணப்படுகின்றபோதும் மாகாண சபை, பாராளுமன்றம் என்பவற்றில் மலையக பெண்களின் பிரதிநிதித்துவம் கேள்விக்குறியாகியுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்கள். சமூகத்திலும், தொழிற்சங்கங்களிலும் கூட பெண்களுக்கு உரிய இடம் வழங்கப்படுவதாக இல்லை என்ற குற்றச்சாட்டும் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருக்கின்றது.

பெண்கள் தொடர்பான பல தீர்மானங்களை ஆண்களே பல இடங்களில் மேற்கொள்ளுகின்றனர். இதனை பெண்களுக்கு இழைக்கப்படும் ஒரு அநீதியாகவே கருத முடியும். பெண்கள் குறித்த தீர்மானங்களை பெண்களே மேற்கொள்ளும் நிலை உருவாகுமிடத்து அது அவர்களின் அபிவிருத்திக்கு தோள்கொடுப்பதாக அமையும். சமூகத்தில் அவர்கள் தலை நிமிர்ந்து வாழ்வதற்கும் இதனால் வழிவகைகள் ஏற்படும். அதைவிடுத்து பெண்கள் குறித்த தீர்மானங்களை இன்னொரு தரப்பினர் மேற்கொள்வதென்பது எவ்விதத்திலும் நியாயமானதாக அமையாது என்பதையும் விளக்கிச் செயற்பட வேண்டும். மலையக பெருந்தோட்ட யுவதிகள் இன்று பல்வேறு துறைகளிலும் கால்பதித்து வருவது சிறப்பான ஒரு விடயமாகும். ஆசிரியைகள், முகாமைத்துவ உதவியாளர்கள், கிராமசேவகர்கள் என்று பல அரசு தொழிற்றுறைகளிலும் மலையக பெண்களின் ஆதிக்கம் படிப்படியாக அதிகரித்து வருவது மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும். இந்நிலை மென்மேலும் அதிகரித்தல் வேண்டும். இத்தகைய பெண்களை உதாரணமாக முன்னிறுத்தி ஏனைய பெண்களும் பல்வேறு துறைகளிலும் முன்செல்ல கற்றுக் கொள்ள வேண்டும். மலையக யுவதிகளின்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# யாதும் ஊரே யாவரும் கேளிர்

## திரைப்படம் பற்றிய பார்வை

சிவவதனி பிரபாகரன்

இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகளிற்கு முன்னர் பாடி வைத்த கணியன் பூங்குன்றனாரின் புகழ்பெற்ற 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' பாடல் வரி தமிழன் என்பவன் யார் என்பதையும் எத்தகைய பண்பினன் என்பதையும் உலகிற்குச் எடுத்துச் சொல்லும்!

"உலக மக்கள் யாவரும் ஒருவர் பெற்ற மக்களே" என வாழ்ந்ததோடு உலகிற்கு பொதுமைச் சிந்தனையோடு வாழச் சொல்லிக் கொடுத்தவன் தமிழன் என்பதற்குச் சான்று பகர்கின்ற வரி இது வாகும்!

மூவேந்தர் ஆண்ட வரலாற்றுச்சிறப்பைக் கொண்டு வட வேங்கடம் முதல் தென் குமரி வரை ஆண்ட தமிழினம் இன்று மாண்ட வரலாற்றுத் துன்பங்களை உலகின் மூத்த குடியான தமிழ்க் குடி இன்று மலையளவாகச் சுமக்கின்றது!

இவ்வண்ணம் வந்தாரை வாழ வைத்த தமிழன் இன்று சொந்த மண்ணில் வாழும் உரிமை இழந்து தனக்கென்றோர் தேசமின்றி ஏதிலியாய் அகில வீதிகளில் அலைகின்றான்!

சொந்த மண்ணிலேயே ஆளும் உரிமையற்ற அடிமைகளாக வாழும் கொடிய வாழ்வினை ஒட்டுமொத்த தமிழர்களும் இன்று வாழ்வெனக் கொண்டுள்ளனர்!

இத்தனை கோடி தமிழர் உலகெங்கும் பரந்து இருந்தும் தமிழர் ஆண்ட தம் தாய் மண்ணாம் தமிழ் நிலங்களை இழந்து அகதிகளாகவும் அடிமைகளாகவும் வாழ்கின்றனர் தமிழகத்திலும் தமிழீழத்திலும்!

உலகெங்கும் அலைந்து அகதியாகச் சென்ற தமிழர்கள் தாம் அடைக்கலம் புகுந்து வாழும் தேசங்களில் கரையொதுங்கி வாழ்வதற்கான சகல உரிமைகளும் பெற்று தம்மை வாழ்வியலாக வளர்த்துக்கொள்ளும் உரிமையும் பெற்று ஆட்சியில் பங்கேற்கும் உரிமையும் பெற்றுள்ளனர்.

ஆனால் அன்னைத் தமிழகம் என்று சென்ற அகதிகள் வாழ்வோ கண்ணீரில் தத்தளித்து சந்ததிகள் கடத்தும் உரிமைகள் ஏதுமின்றி வலிகளோடு தொடர்கின்றது!

"தனி ஒருவனிற்கு உணவில்லை என்றால் செகத்தினை அழித்திடுவோம்!" என்றான் பாரதி!

தனி ஒரு சமூகமாக ஏதிலிகளாக ஈழத் தமிழ் அகதிகள் தமிழக முகாம்களில் படும் துயரங்கள் வாய்விட்டுச் சொல்ல முடியாதவை!

அதை வாய் திறந்து பேச எவரும் வலிமையாக முன் வரவில்லை என்பது பெருங் குறையாகவுள்ளது!

இந்தக் குறை போக அதை ஓரளவுக்கேனும் சொல்ல வேண்டும் என்ற துடிப்போடு எடுக்கப்பட்ட திரைப் படமாக "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற திரைப்படம் சிறியளவில் ஒரு புரட்சி செய்துள்ளது!

"திரைப் படங்களில் மூழ்கி கருத்துக்களை அலை அலையாக அள்ளி வீசும் தமிழ் சினிமா இரசிகர்கள் இந்தத் திரைப்படத்தைப் பெரியளவில் பேசுபொருளாக்காதது ஏன்?" என்ற கேள்விக்கு இன்னமும் விடை தெரியவில்லை.

ஆனால் விமர்சனங்களிற்கு அப்பால் இந்தத் திரைப்படம் தமிழக அகதி மக்களின் துயரை ஓரளவு வெளிக்கொண்டு வந்து இதயங்களை உருக்கும் வகையில் மனித்தத்தை தட்டி எழுப்பிச் சொல்லியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை!

நீண்டகாலமாக வெளியாகாமல் இருந்த நடிகர் விஜய் சேதுபதியின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" படம் தடைகளைத் தாண்டி வெளியாகியுள்ளது.

இதில் முக்கிய பாத்திரமேற்று நடித்த நடிகர் விவேக் இன்று எம்மோடு உயிரோடு இல்லை!

அறிமுக இயக்குநர் வெங்கட கிருஷ்ண ரோகாந்த் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடித்துள்ள திரைப்படம் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'.

இந்த படத்தில் விஜய் சேதுபதியுடன், இயக்குநர்கள் மோகன்ராஜா, மகிழ் திருமேனி, கரு. பழனியப்பன், நடிகைகள் மேகா ஆகாஷ், ரித்விகா, கனிகா, விவேக், சின்னி ஜெயந்த் உள்ளிட்ட பலரு நடித்துள்ளனர்.

நிவாஸ் கே பிரசன்னா இசையமைத்துள்ள இப்படம் தடைகளை தாண்டி 2 ஆண்டுகளுக்குப் பின் வெளிவந்துள்ளது.

புனிதன் என்ற பெயரில் ஈழத் தமிழரான விஜய் சேதுபதி தன்னுடைய இசையால் உலகை வலம் வந்து சாதிக்கும் பெருங் கனவை இலக்கெனக்கொண்டு அதை அடைய தனக்கென ஒரு குடிமகன் அடையாளம் வேண்டும் எனப் போராடுகின்றார்.




இலக்கை அடைய ஒரு அகதியாக விஜய் சேதுபதி என்ன வரிகளைக் கையாண்டார்.. இதனால் என்ன சிக்கல்களை எதிர்கொள்கிறார்? என்பதே இப்படத்தின் கதையாகும். இது கதை அல்ல! யதார்த்தத்தின் உண்மைகள்!

நிலம், நாடு, அரசியல் போன்றவற்றால் உலக மக்கள் பிரிக்கப்பட்டிருப்பது,

அடக்குமுறையாளர்கள் இனப்படுகொலையாளிகளால் தமிழ் மக்கள் அகதிகள் ஆக்கப் படுகையில் உருவாகும் அவர்களின் மன வலிகள், உள்ளத்தின் எதிர்பார்ப்புகள் என ஈழத்தமிழர்களின் நியாயப்பாடுகளை ஓரளவிற்குச் சொல்ல எடுத்த முயற்சிகள் போற்றப்பட வேண்டியவை!

இந்த முயற்சியின் வெற்றி தோல்விகளிற்கு அப்பால் உலகம் ஊமையாகிப் பாராமுகமாகிக் கடந்து செல்ல நினைத்த ஒரு உண்மையை அழுத்தி உரத்துச் சொன்னமைக்குப் படத்தின் படைப்பில் கைகோர்த்த அனைவரிற்கும் பாராட்டுக்கள்!

இந்தக் கதைக்கு வசனம் எவ்வளவு முக்கியமானது என்பதை பொறுப்போடு உணர்ந்து கையாண்டிருக்கின்றார்கள்!

கியூ பிரிவினரின் விசாரணையின்போது "என்னுடைய உடையைச் சரி செய்ய எனக்கு அனுமதி கொடுங்கோ" என கண்ணீரின் மத்தியிலும் கன்னிகா வீரம் கொப்பளிக்கச் சொன்ன காட்சி..

அதி உயர் கல்வித் திறன் இருந்தும் மருத்துவக் கல்விக்கு வாய்ப்பின்றிப் போன நிலையிலும் மருத்தவராக தன்னை வளர்த்துக் கொண்ட ஈழ அகதிப் பெண் மருத்துவம் பார்த்த காட்சி..

இன்னொரு முகாம் வாழ் இளைஞனை காதலிக்கும் அவள் காதலை அவன் மனமார விரும்பியும் அதை ஏற்க மறுத்து

"நான் ஒரு அகதி....அவள் ஒரு அகதி.. நாங்கள் பெறும் பிள்ளை அகதியாகி துன்பப்பட வேண்டுமா? ஒரு அகதிச் சந்ததியை உருவாக்க வேண்டுமா?"

எனக் கேட்கும் ஈட்டியால் இதயத்தில் குத்தும் வலி தரும் காட்சி...

இறுதிக்கட்ட பேசாமொழி அரங்கேறிப் பேசி இதயங்களை உலுப்பிய காட்சி...

போற்றுதற்குரிய கதை வசனம், இயக்கம்!

குறிப்பாக படத்தின் உச்சக்கட்ட (கிளைமேக்ஸ்) காட்சி மிகச்சிறப்பாக பேசப் பட்டுள்ளது. அதில் நடிகர் விஜய் சேதுபதி அவர்கள் உயிரோட்டமாக பேசியமைக்குச் சிறப்பு பாராட்டுகள்!

சொந்த நாட்டில் வாழ முடியாமல், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு எதிர்கால வாழ்வு பற்றிய பெரும் கனவுகளோடு அந்நிய தேசங்களிற்கு வாழ்வு தேடி அகதிகளாகச் சென்ற வர்க்கே இந்த கதையில் சொல்லப்பட்ட வலிகளின் ஆழம் புரியும்!

"அகதியாக வாழ்ந்து பார்! அகதிகளின் வலி புரியும்!" என்பர்.

இன்று தமிழகத்தில் முகாம்களில் வாழும் மக்களின் வலிகளைப் பட்டும் படாமல் சொல்ல முனைந்த இந்தப்படம் சிறையைவிட கொடியதான சிறப்பு முகாமில் முடக்கப்பட்டிருக்கும் 70 க்கும் மேற்பட்ட தமிழ் அகதிகளின் துயரைத் துளியளவும் தொட்டிருக்கலாமே எனும் ஒரு குறை மட்டும் எம்மை ஏங்க வைக் கின்றது!

எவ்வாறெனினும் தமிழக முகாம் களில் அகதிகளாக இருக்கும் மக்களின் வலிகளை படம் பார்ப்பவர்களின் கண் கள் கலங்கும்படி சொன்னமைக்குப் பாராட்டுகள்!

அகதிகள் என்றாலும் அவர்களும் மனிதர்கள்தானே என்ற எண்ணத்தை ஆழமாக ஏற்படுத்துகிறது இப்படம்!

படத்தில் நிவாஸ் கே பிரசன்னாவின் பின்னணி இசை இரசிக்கும்படி உள்ளது.

நடிகர் சிம்புவின் எழுச்சிக் குரலில் வெளிவந்த "முருகா" பாடலைப் பாராட்ட வார்த்தைகள் இல்லை!

மொத்தத்தில் அன்னைத் தமிழகத்துள் சந்ததி கடந்தும் குடியுரிமை, கல்வியுரிமை, வேலை வாய்ப்பு உரிமை என எந்த உரிமைகளுமின்றி அகதிகளாக வாழும் ஈழத் தமிழ் மக்களின் வாழ்க்கையின் வலிகளை சொன்ன 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' போற்றப்பட வேண்டிய திரைப் படங்களில் ஒன்று..!

பார்த்து உலகத் தமிழ் மக்கள் ஆதரவு தர வேண்டிய திரைப்படம்!

• • •

# தமிழீழத்தின் உரிமை பறிக்கும் தரணி

முனைவர் ஆ. குழந்தை, சென்னை

ஈழத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு இந்தியாவால் இலங்கை அரசமைப்பில் கொண்டு வந்த 13வது திருத்தச்சட்டம் உரிமை வழங்கும் என்று பரவலாக பேசப்படுகின்றது. ஆனால் அந்த திருத்தச் சட்டம் எந்த அளவிற்கு வீரியமிக்கதாகவும் ஆற்றல்மிக்கதாகவும் இருக்கிறதா? என்றும் இந்த திருத்தச் சட்டத்தை செயல்படுத்தவிடாமல் நீர்த்துபோக செய்ய இலங்கையும் உலக நாடுகளும் செயல்படுகின்றதென்றும் ஆய்வாளர் அரூஸ் வழங்கும் அறிவுறுத்தலையும் அவதானிப்பையும் இங்கு கட்டுரையாக தருகிறேன். அவர் வழங்கும் அறிவுரையை கவனத்தில் எடுத்து செயல்பட வேண்டும் என்பது நமது கடமையாக இருக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம்.

### இரணிலின் நரித் தந்திரம்



அடிப்படையில் இரணில் விக்கிரமசிங்க குள்ளநரியாகவும் சிங்கள பௌத்த பேரினவாதியாகவும் விளங்குகிறார். இவர் மிகப்பெரிய நடிகராக இருக்கிறார். அரூஸ் இரண்டு காரணங்களை முன்வைக்கிறார். ஒன்று. 13 வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றினால் வரவிருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலில் பேரினவாத ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் அவருக்கு எதிராக திரும்பிவிடுவர் என்ற அச்சமும் எதிர்பார்ப்பும் அவரிடம் இருக்கின்றன. இரண்டு. தமிழ் மக்களுக்கு எவ்வித உரிமையும் கொடுக்க கூடாதென உறுதியாக இருக்கிறார். அதனால் இந்த திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற நாடாளுமன்ற ஒப்புதல் வேண்டுமென்று நாடகமாடுகிறார். நாடாளுமன்றம் ஒப்புதல் கொடுத்தால் தேர்தலில் எந்த கட்சியும் அவர்மீது குறைகூற முடியாது. எதிர்கட்சிமீது பழியைப் போட்டுவிடலாம் என்று எண்ணுகிறார். அதே நேரத்தில் நாடாளுமன்றத்தில் ஒப்புதல் கிடைக்காமல் நீர்த்துபோக செய்துவிடலாம் என்று கணிக்கின்றார். தமிழ் மக்களிடம் எதிர்கட்சிகள்தான் ஒப்புதல் தரவில்லை என்று கூறி நல்லபெயர் எடுத்துவிடலாம் என்று நினைக்கிறார். அந்த நீர்த்துபோக செய்தலை நியாயப்படுத்த கட்சிகளின் கருத்துகேட்பு நடத்துகிறார். இந்தக் கபடநாடகத்தை தெளிவாக நடத்துகின்றார். இதற்காக இந்தியா போன்ற உலகநாடுகளின் ஆதரவையும் ஒப்புதலையும் நாடுகின்றார். எனவே இரணிலினால் எவ்வித உரிமையும் தமிழ் மக்களுக்கு கிடைக்காது என்பதில் தமிழர்கள் உறுதியாக இருக்கவேண்டும்.

### நாடாளுமன்றத்தின் நாடித்துடிப்பின்மை

13 வது திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற நாடாளுமன்றத்திற்கு கொண்டுசெல்லவேண்டு மென்று பலரும் கூறி வருகின்றனர். ஏற்கனவே ஒப்புதல் அளித்து நிறைவேற்றப்பட்ட திருத்தத்தை செயல்படுத்த மீண்டும் நாடாளுமன்றத்திற்கு கொண்டுசெல்ல தேவையில்லை. அந்த திருத்தத்தில் கொடுக்கப்பட்ட உரிமைகளையோ, அதிகாரத்தையோ அதிகப்படுத்தவேண்டுமென்றால் மீண்டும் நாடாளுமன்றத்திற்கு கொண்டு செல்லலாம். நிறைவேற்றப்பட்ட திருத்தத்தை செயல்படுத்த நாடாளுமன்றத்தின் ஒப்புதல் தேவையில்லை. ஆனால் மீண்டும் நாடாளுமன்றத்தை நாடுதல் இந்த திருத்தத்தை ஒன்றுமில்லாமல் ஆக்குவதற்கு தேவைப்படுகிறது. நாட்டினுடைய நாடாளுமன்றத்தை பலிக்கடா ஆக்குவதற்கு முயற்சிசெய்கின்றனர். ஒரு திருத்தத்திற்கு இரண்டு ஒப்புதல்கள் தேவையில்லை. நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட திருத்தத்தை நாடாளுமன்றத்தால் நீர்த்துபோகச் செய்வது நாடாளுமன்றத்தையே நாசமாக்குவதாகும்.

### ஆளும் கட்சியின், எதிர்க்கட்சிகளின் பேரினவாதம்

இவர்கள் பெயருக்குதான் ஆளும்கட்சி என்றும் எதிர்கட்சிகள் என்றும் இருக்கின்றனர். இவர்களிடையே எவர் ஆட்சி அதிகாரத்தை பிடிக்கவேண்டும் என்ற போட்டி இருக்கிறது. உண்மை, நேர்மை, நயன், உரிமை போன்றவற்றை மறுப்பவர்கள்தான் இந்த எதிர்கட்சி உறுப்பினர்கள். இவர்கள் பௌத்த பிக்குகளின் ஆணையின்படி நடப்பவர்கள். இலங்கை அரசு பௌத்த மதத் தலைவர்களின் கைக்கூலிகளாகவும் பாதுகாப்பு கவசமாகவும் நீட்சியாகவும் செயல்படுகின்றனர். இவை வகுப்புவாத கூட்டத்தில் உள்ள பிரிவுகளாகும். இவர்கள் தமிழர்களை எதிரிகளாக கருதி, எவ்வித உரிமைகளையும் கொடுக்க கூடாது என்று எண்ணி செயல்படுகின்றனர். நாடாளுமன்றம் செயல்படாமல் முடக்குவது இந்த எதிர்கட்சிகளும் ஆளும் கட்சிகளாகும். இவர்கள் புத்தபிக்குகளின்கையில் உள்ளனர். நாடாளுமன்றம் இவர்கள் கட்டுப்பாட்டில் உள்ளது. அதனால் இந்த திருத்தத்தை நிறைவேற்றாமல் நீர்த்துப்போக செய்துவிடுவர். ஏனென்றால் இந்த திருத்தம் இலங்கையை சிங்களமயமாக்குதலுக்கு அல்லது பௌத்தமயமாக்குதலுக்கு எதிராக இருக்கும் என்று கருதுகின்றனர். காணி அதிகாரத்தையும் காவல் அதிகாரத்தையும் கொடுத்துவிட்டு சிங்கள மயமாக்குதலை நடத்தமுடியாது. எனவே இதை ஒருபோதும் செய்ய முன்வரமாட்டார்கள்.

இந்த திருத்தத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைவதால் இசுலாமியர்கள் சிறுபான்மையினராக மாற்றப்பட்டுவிடுவர். தமிழர்கள் பெரும்பான்மையினராக வருவர். அதனால் தங்களது அதிகாரத்தை செலுத்த முடியாதெனஅச்சம் அவர்களிடம் தேவையில்லாமல் இருக்கிறது. இசுலாமியர்கள் எப்பொழுதும் பெரும்பான்மை இனக்குழுக்களான சிங்களவர்களோடு கைகோர்த்து செயல்படுவர். எப்பொழுதுமே தமிழர்களை பகைவர்களாக கருதி, துன்புறுத்தி கொலை செய்தவர்கள். தங்களுகென்று ஒரு மாகாணத்தை கைப்பற்ற வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையில் செயல்படுகின்றனர். சிங்களவர்களுக்கு ஆதரவாகவும் தமிழர்களுக்கு எதிராகவும் செயல் படும் இசுலாமியர்கள் இந்த 13 வது திருத்தச் சட் டத்தை எதிர்க்கின்றனர்.

### இந்திய ஒன்றிய அரசின் தமிழின விரோதம்

இந்த 13 வது திருத்தத்தை இந்திய ஒன்றிய அரசு கொண்டுவந்து, இலங்கை அரசை ஏற்க வைத்தது. அந்த அதிகாரம் இந்திய ஒன்றிய அரசுக்கு இருக்கும்போது அதைச் செயல்படுத்த, இலங்கை அரசை கட்டாயப்படுத்த உரிமையும் அதிகாரமும் இருக்கின்றன. ஆனால் செய்வதற்கு மனமில்லை. ஏனென்றால் தமிழின விரோதம் இந்திய ஒன்றிய அரசிடம் தலைவிரித்தாடுகிறது. தமிழினக்குழு அழிந்துவிடவேண்டும் என்ற எண்ணத்தில் வாழ்கிறது இந்திய ஒன்றிய வகுப்புவாத அரசு. இந்த வகுப்புவாத அரசியலால் வடக்கு கிழக்கு மாகாணங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர, மன்னாரை அதானிக்கும், யாழ்ப்பாணம், பலாலி வானூர்தி நிலையம், திரிகோணமலை துறைமுகம், வடக்கில் உள்ள தீவுகள் அனைத்தையும் இந்திய ஒன்றிய அரசு எடுத்துக்கொண்டது. இந்துத்துவ, வகுப்புவாத அரசியல் அரசு அகண்ட பாரத கனவில் ஆட்சிசெய்வதால் தமிழர்கள் இருக்க கூடாதென நினைக்கிறது. தேசிய தலைவர் பிரபாகரன் “தமிழர்களின் பாதுகாப்பை இந்திய ஒன்றிய அரசிடம் ஒப்படைத்துவிடுவோம்” என்றார். ஆனால் அதற்கு மாறாக இந்திய ஒன்றிய அரசு தமிழர்களின் பாதுகாப்புக்காக எதுவும் செய்யவில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களை இந்திய ஒன்றியத்தின் மாநிலங்களாக மாற்றி, தமிழர்களை அடிமையாக்க நினைக்கிறது.



### தமிழ் அரசியல் தலைவர்களின் தன்மானமின்மை



இவர்களிடம் ஒற்றுமை இல்லை. தெளிவான அரசியல் நிலைப்பாடில்லை. எல்லா தமிழ் அரசியல்வாதிகளும் ஒன்றாக இணைந்து, ஒற்றைக் குறிக்கோளை முன்வைக்க தயாராக இல்லை. நமது முடிவை எதிரி முடிவுசெய்யக் கூடாது. இது தன்னாட்சி தத்துவத்திற்கு எதிரானது. திரு கஜேந்திர பொன்னம்பலம் இந்த 13 வது திருத்தச் சட்டம் பயனற்றது என்று எதிர்த்தார். ஆனால் மற்றவர்கள் செயல்படுத்தவேண்டுமென்று அமைதியாக உள்ளனர். இதனால் மக்களுடைய பிரச்சினைகளையும் எதிர்பார்ப்புகளையும் முடிவையும், உணர்வுகளையும் வெளிப்படுத்த, சிங்கள ஆட்சியாளர்களிடம் தெரிவிக்க தயங்குகின்றனர். மறைக்கின்றனர். மறுக்கின்றனர். அதனால் தமிழ் அரசியல் தலைவர்களிடம் துணிவும், கருத்துத் தெளிவும், அரசியல் நிலைப்பாடும் தெளிவாக இல்லை அல்லது தெரிந்தும் தெரியாதுபோல நடிக்கின்றனர். ஈழத்தமிழர்களை பிரதிநிதிப்படுத்த

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# சனல்4 காணொளி தற்போது வெளிவர காரணம் என்ன?

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**

இலங்கையில் இடம்பெறும் பூகோள அரசியல் நகர்வுகளில் மேற்குலகம் தனது மற்றுமொரு காயை நகர்த்தியுள்ளது. பிரித்தானியாவை கொண்ட சனல் 4 நிறுவனம் வெளி யிட்ட காணொளி என்பது ராஜ பக்சா குடும்பத்தினரின் அரசியல் எதிர் காலத்தை இல்லாது செய்யும் ஒரு நகர்வு.



தமிழ் மக்கள் மீதான இலங்கை அரசின் போரில் இலங்கை அரசுக்கு நிபந்தனைகளின்றி ஆதரவளித்த இந்தியாவும், அமெரிக்காவும் போரின் பின்னர் தமது நிலைகளை உறுதி செய்வதில் காண்பித்த போட்டிகள்தான் இன்றும் இலங்கையை மீளமுடியாத பொறிக்குள் தள்ளி வருகின்றது.

போரின் பின்னர் ராஜபக் சாக்களுக்கு இந்திய தரப்பு பொன் னாடை போர்த்தி கௌரவித்ததும், சீனா உள்நுளைந்ததும் மேற்குலகம் போட்ட கணக்கு தப்பாகிப்போனது.

அதனை சரி செய்வதற்கு அமெரிக்கா கிறீன் கார்ட் வைத்திருந்த சரத் பொன்சேகா மூலம் இராணுவப் புரட்சிக்கு அமெரிக்கா முயன்றது. ஆனால் அதனை இந்திய புலனாய்வுத் துறை ராஜபக்சாக்களுடன் இணைந்து முறியடித்தது.

அதன்பின்னர் மேற்குலகத்தின் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஜனநாயகத்தை போதித்தல் என்ற போர்வையில் இலங்கையில் கால்பதித்தன. பிரித்தானியாவில் இருந்த சந்திரிக்கா களமிறக்கப்பட்டு சுதந்திரக்கட்சி உடைக்கப்பட் டது. பல மில்லியன் டொலர்கள் வாரி இறைக் கப்பட்டு மியான்மாரிலும், இலங்கையிலும் ஆட்சி மாற்றம் கொண்டுவரப்பட்டது.

2014 ஆம் ஆண்டு சீனதலைவர் இலங்கைக்கு வருகைதந்ததாலும் பல உடன்பாடுகள் எட்டப் பட்டதாலும் சினமடைந்த இந்தியா இந்த ஆட்சிமாற்றத்தில் சிறு இலபமடையலாம் என பார்த்தது. அதாவது தான் செய்ய வேண்டிய வேலையை அமெரிக்கா செய்கின்றது என பொறு மைகாத்தது.



ஆனால் தனக்கு கிடைத்த இடைவெளியை பயன்படுத்தி இரு தரப்பு படைத்துறை சேவைகள் *Acquisition and Cross Servicing Agreement (ACSA)* உடன் படிக்கையை (இந்த உடன்படிக்கை 2017 ஆம் ஆண்டுதான் புதுப்பிக்கப்பட்டது.) பலப்படுத்திய அமெரிக்கா, சோபா மற்றும் மிலேனியம் சலஞ் என்று நகர ஆரம்பித்தது. தான் மிகவும் ஒரு இக்கட்டான நிலையில் உள்ளதை உணர்ந்தது இந்தியா, சீனாவைவிட மிகப்பெரும் ஆபத்து தனக்கு அருகில் நெருங்குவதை அவர்கள் உணர்ந்தபோது ஒரு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த திட்டமிட்டனர்.

ஏற்கனவே போர்க்குற்ற வழக்குகள் மற்றும் ஐ.நா தீர்மானங்கள் என மேற் குலகத் திற்கும் - ராஜபக்சாக்களுக்கும் இடை யில் நிலவிய விரிசல்களை சாதகமாக்க நினைத்தது இந்தியா. எனவே தான் இந்தியா ஒருபோதும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதில்லை.

ராஜபக்சாக்கள் மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும் என்றால் இலங்கையில் உள்ள பொரும்பான்மை சிங்கள இனத்திற்கு ஏனைய இனங்களால் அச்சுறுத்தல்கள் இருப்பதான தோற் றப்பாடு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். தமிழர் தரப்பு, முஸ்லீம் தரப்பு தான் அவர்களின் பகடைக்காய்கள்.

2018 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வவுணதீவில் இடம்பெற்ற தாக்குதலில் இரண்டு காவல்துறையினர் கொல்லப்பட்டனர். அதனை விடுதலைப்புலிகள் செய்ததாக கூறி கிளிநொச்சி வரை சென்ற இலங்கை படையினர் முன்னாள் போராளிகளை கைது செய்தனர். அதனை பயன்படுத்தி மகிந்தா தன்னை பிரதமராக அறி வித்தார். ஆனால் அந்த முயற்சி எதிர்பார்த்த படி வெற்றிபெறவில்லை.




இரண்டாவது திட்டம் தீட்டப்பட்டது. அது தான் உயிர்த்த ஞாயிறு தாக்குதல். இந்த தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பின் இலங்கை பிரிவு செய்ததாக கூறியபோதும் தாக்குதல் இடம் பெற்றபோது அந்த அமைப்பு சிரியா மற்றும் ஈராக்கில் முற்றாக அழியும் நிலையில் இருந்தது. மறுவளமாக கூறப்போனால் இந்த தாக்குதல் இடம்பெற்றதை பத்திரிகைகளில் பார்த்து தான் அந்த அமைப்பே அறிந்திருக்கும். எனவேதான் இரண்டு தினங்கள் கழித்து அதன் உரிமைகோரல் வந்தது. அதுவும் மிகவும் பலவீனமான நிலையில். இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி சுரேஸ் சாலேயும் துணைஇராணுவக் குழுவின் தலைவர் பிள்ளையானும், ராஜபக் சாக்களுமே இந்த குண்டுவெடிப்பின் முக்கிய பங்குதாரர்கள் என்பது சனல்போர் வெளியிட்ட ஆதாரங்களின் தொகுப்பு. அதனை பிள்யையானின் முன்னாள் பேச்சாளர் அசாத் மௌலானா வாக்கு மூலமாக கொடுத்துள்ளார்.

அதற்கு வலுச்சேர்க்கும் முகமாக தனது



அடையாளத்தை வெளிப்படுத்தாத முன்னாள் படைத்துறை புலனாய்வு அதிகாரியும், முன்னாள் காவல்துறை புலனாய்வு அதிகாரியும் தமது கருத்துக் களையும் பதிவுசெய்துள்ளனர். தாக்குதல் திட்டம் தீட்டப்பட்ட இடம் மற்றும் அந்த திட்டத்தில் பங்குகொண்டவர்களே தாக்குதல் நடத்தியதை தான் தாக்குதல் நடைபெற்ற இடங்களில் கிடைத்த காணொளிகள் மூலம் உறுதிப்படுத்தியதாக மௌ லானா கூறுகின்றார்.

ஆனால் தான் அந்த சமயம் அங்கு இருக்வில்லை என சுரேஸ் சாலே கூறினாலும் அவர் தான் இருந்த இடத்தை குறிப்பிடவில்லை. எனினும் சனல் 4 காணொளி தொடர்பில் மறுப்பறிக்கை வெளியிட்ட கோத்தபாயா சுரேஸ் இந்தியா வில் இருந்ததாக கூறுகின்றார். அதாவது ஒரு புலனாய்வு அதிகாரிக்கு இந்தியாவில் இருந்து இலங்கை வந்து போவது கடினமான விடையமாக இருக்க முடியாது.

மேலும் தேவாலையங்கள் மற்றும் ஆடம்பரவிடுதிகளை குறிவைத்து தாக்கிய தாக்குதலாளிகள் இந்தியாவுக்கு சொந்தமான விடுதியை தாக்க முற்படவில்லை எனவும், தவறுதலாக அங்கு சென்ற தாக்குதலாளி கூட அங்கிருந்து வெளியேற்றப்பட்டதாகவும் தெரிவிக் கப்படுகின்றது. அதனை பிரித்தா னியாவில் இருந்து வெளிவரும் த ரைம்ஸ் நாளேடு இந்தியாவுக்கு சொந்தமான விடுதி என கோடிட்டு காட்டுகின்றது. தாக்குதலாளிக்கு தொலைபேசி அழைப்பு வருவது மற்றும் அவர் அங்கிருந்து வெளியேறுவது பதி வாகியுள்ளது.

மேலும் ஐ.எஸ்.ஐ.எஸ் தாக்குத லாளிகளின் கருத்துப்படி இலங்கையில் அமெ ரிக்காவின் படைத்துறை பிரசன்னம் அதிகரிப்பதே தாக்கு தலுக்கான காரணம் என்று கூறப்பட்டிருந்தது. அதாவது அமெரிக்க பிரசன்னம் அதிகரிப்பதால் யாருக்கு பிரச்சனை என்பதை நான் உங் களுக்கு கூறத்தேவையில்லை.

அதாவது இந்த தாக்குதல் இலங்கை குள் இருந்து மட்டும் திட்டமிடப் படவில்லை என்பது தெளிவானது. ஆனால் அன்று ஏன் மேற்குலகம் தற்போது வெளியிட்ட ஆதாரங்களை வெளியிட வில்லை என்ற கேள்விகள் எழுந்துள் ளன. இந்த தாக்குதல் யார் எதற்காக செய்தது என்று அவர்களுக்கு தெரிந்தபோதும், அதனை மூடிமறைத்து அன்றைய ரணில்-மைத்திரி அரசை காப்பாற்றவே மேற்குலகம் முனைந்தது.



அமெரிக்காவின் 33 எப்.பி.ஐ அதிகாரி களும், பிரித்தானியாவின் வெளியக புலனாய் வுத்துறையான எம்.ஐ-6 இன் 12 அதிகாரிகளும் இலங்கை அரசு அழைக்காமலே உடனடியாக களத்துக்கு வந்து தமக்கு தேவையான விசாரணை களை முடித்துக்கொண்டு, ஆதாரங்களையும் எடுத்துச் சென்றதை இலங்கை அரசே உறுதிப்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

### மீறப்படும் ... தொடர்ச்சி ...

கல்வித்துறை ஈடுபாடு தற்போது அதிகரித்து வருகின்றமை மற்றுமொரு இனிப்பான செய்தியாகும். இச்செயற்பாடு பெண்களின் தலையெழுத்தை நல்லபடியாக மாற்றியமைக்க வழிசமைப்பதாக அமையும்.இதனை கருத்தில் கொண்டு கல்வித்துறை நாட்டம் மலையகப் பெண்களிடையே மேலும் விருத்தி பெற வேண்டும்.

சமூகச் சக்கரத்தில் பெண்கள் மிகுந்த முக்கியத்துவம் மிக்கவர்களாக கருதப்படுகின்றனர். இந்நிலையில் பெண்களின் அபிவிருத்தி தொடர்பாக உலக நாடுகள் பல்வேறு திட்டங்களை வகுத்து செயற்படுவதனையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இத்தகைய திட்டங்கள் இலங்கையிலும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அத்தோடு மலையக பெண்கள் போன்ற பின்தங்கிய பெண்களின் அபிவிருத்தி கருதி விசேட திட்டங்களை ஆட்சியாளர்கள் முன்வைப்பதும் அவசியமாகும். குறிப்பாக அரசியலமைப்பு ரீதியாக இத்தகைய திட்டங்கள் உறுதிப்படுத்தப்படுமானால் அது சிறப்பானதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் அமையும். இதன் மூலம் மலையக பெண்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

• • •

### கடல்களில்... தொடர்ச்சி ...

கண்காணிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உலகில் ஏறத்தாள ஆண்டு தோறும் 50 பில்லியன் தொன் மண் மற்றும் கற்கள் பயன்படுதத்ப்படுகின்றன. அதில் 6 பில்லியன் தொன்கள் கடல்களில் இருந்து பெறப்படுகின்றன என அவர் மேலும் தெரிவத்துள்ளார்.

அமெரிக்காவின் கிழக்கு கடற்கரை பகுதி, வட கடல், தென்கிழக்கு ஆசிய கடல் ஆகியவையே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தோனேசியா, தாய்லாந்து, கம்போடியா, வியட்னாம் மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் கடல்வள அகழ்வை தடை செய்துள்ளன.

### சனல் 4 ... தொடர்ச்சி ...

படுத்தியுள்ளது.

எனினும் அவர்களால் அன்றைய அரசை காப்பாற்ற முடியவில்லை. எனினும் இந்த தாக்குதலால் ஏற்படப்போகும் பொருளாதார வீழ்ச்சியைபயன்படுத்திபுதியஅரசைக்கவிழ்ப்பது அவர்களின் திட்டமாக இருந்திருக்கலாம். ஏனெனில் இந்த தாக்குதலின் பின்னர் சுவிஸில் இருந்து வந்த விமானத்தில் ஒரு பயணியே இலங்கை வந்திருந்தார். இலங்கையின் முக்கிய வருமானமே சுற்றுலா துறைதான்.

அதன் பின்னர் வந்த கோவிட்டும் மேற்குலகத்தின் நகர்வை இலகுவாக்கியது. 2022 ஆம் ஆண்டு கோத்தபாயா துரத்தப்பட்டார். மீண்டும் ரணில் வந்தார். சரி உயிர்த்தஞாயிறு தாக்குதலின் பயன்கள் இல்லாது செய்யப்பட்டுவிட்ட நிலையில் தற்போது ஏன் சனல் 4 இந்த காணொளியை வெளியிட்டுள்ளது?

இலங்கையில் ஒரு மதக்கலவரம் இடம்பெறப்போவதாக பக்கத்து நாட்டு புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன. அதனை தொடர்ந்து யாழ்ப்பாணம் சென்ற அமெரிக்க தூதுவர் ஜுலி சங் குருந்தூர்மலை விவகாரத்தை வைத்து இந்தியா ஒரு மதக்கலவரத்தை உருவாக்கப் போகின்றதா என்பதை நேரிடையாகவே தன்னை சந்தித்தவர்களிடம் கேட்டிருந்தார்.

அதாவது மீண்டும் ஒரு வன்முறையை தூண்டி ஆட்சியை மாற்ற வெளிநாட்டு சக்தி முயல் வதாக அமெரிக்கா சந்தேகப்படுகின்றது. எனவே தான் பிரித்தானியா களமிறங்கியுள்ளது. ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையின் கனதியும் அதனை தான் சொல்கின்றது.

அதாவது ராஜபக்சாக்களையும், அவர்களின் வரவை விரும்பும் பக்கத்து நாட்டையும் முறியடிப்பதற்கான அஸ்திரங்களே ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையும், சனல் 4 நிறுவனத்தின் காணொளியும்.

அதாவது இலங்கை என்ற ஆடுகளம் மோசமாகுமே தவிர தற்போதைக்கு தணிவதற்கான சாத்தியங்கள் இல்லை.

• • •

### சிங்கள ... தொடர்ச்சி ...

விடயத்திலும் அனைத்து ஈழத்தமிழர்களின் நன்மதிப்பையும் லைக்கா பெற்றிருந்தது. இந்த விடயத்தை அனைவருமே பாராட்டினர்.

போர் முடிவுற்ற பிறகு லைகா நிறுவனம் தமிழர் தாயகப் பகுதியில் இரண்டு வேலைத் திட்டங்களை முன்னெடுத்தது. ஒன்று போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதாரத்தையும், பொருளாதார மீளெழுச்சியையும் ஏற்படுத்த அமைக்கப்பட்டதாக சொல்லப்பட்ட ஞானம் பவுண்டேசன். இரண்டாவது, வவுனியா வடக்கில், நயினாமடு கிராத்தில் அமைக்கப்பட்ட நவீன மாதிரிக் கிராமம். இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்காக வசதிமிகு குடிமனை, குடிநீர் திட்டம், தொழில்வாய்ப்புக்கான தொழிற்சாலை, மருத்து வசதிகள், கல்விக்கூடங்களை உள்ளடக்கியதாக இது அமைக்கப்படும் என விளம்பரப்படுத்தப்பட்டது. பாரியளவு காடுகளை அழித்து அதற்கான வேலைத்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆனால் இரண்டுமே இடைநடுவில் நின்றுபோனது. தற்போது ஞானம் பவுண்டேசனையும் காணவில்லை, நயினாமடு மாதிரிக் கிராமத்தையும் காணவில்லை.

இவ்வாறு இனப்படுகொலைக்குள்ளான –இனப்படுகொலைக்குள்ளாகிக் கொண்டிருக்கும் தன் சொந்த இனத்திற்கு சரியாக எதனையும் செய்யாத லைகா நிறுவனம், இனப்படுகொலையாளனின் வீட்டுத்தீயை அணைக்க கங்கனம் கட்டிநிற்கிறது. விழுந்து கிடக்கும் சிங்கள தேசத்துக்கு உயிர்கொடுக்கப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறது. தமிழர்களைக் கொன்றொழித்த இனப்படுகொலை அரசிற்கு முண்டு கொடுத்துக்கொண்டிருக்கிறது. தமிழர்களின் நிதியினால் நிமிரும் சிறீலங்கா எனும் சிங்கள பௌத்த மேலாதிக்க தேசம், நிமிர்ந்தவுடன் முதற்செய்யப்போவது, தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையை துரிதப்படுத்தும் வேலைத்திட்டத்தைத் தான். தமிழர்களைப் போரை நோக்கித் தள்ளினால் மாத்திரமே சிங்களவர்களுக்கு மூவேளையும் வயிறு நிரப்ப வாய்ப்பு ஏற்படும். எனவே தம் வயிற்றுப் பசிக்காக தமிழர்களின் பிணத்தைத் தேடுகின்றனர். அதற்காகத் தமிழர்களின் பணத்தைப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் லைக்காவுக்கு மட்டுமானதல்ல. மாறாக சிறீலங்கா எனும் சிங்கள பௌத்த தேசத்தின் மீட்சிக்காக முதலீடுகளைச் செய்யத் தயாராகும் அனைவருக்குமானது. இந்த முதலீடுகள் தமிழ் தேசிய இனத்தின் விடுதலை விடயத்திலும் அக்கறை கொண்டவையாக, விழிப்புக் கொண்டவையாக அமைதல் வேண்டும். இலங்கைக்கு விழுந்து விழுந்து உதவி செய்ய வரிசைகட்டும் அனைத்து நாடுகளுமே அந்த உதவிகளின் பின்னால் தம் நலன்களை வைத்திருக்கின்றன. அவற்றை அடை வதற்கான திட்டங்களை வகுத்திருக்கின்றன. சிறீலங்கா அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் இனப்படுகொலைக்கு இலக்காகி வரும் இனத்தினராகிய நாம் மட்டும் இன்னும் எத்தனை காலத்திற்கு வெறும் வெள்ளந்தி மனிதர்களாக உலாவரப்போகின்றோம்?

• • •

### நிபந்தனை... தொடர்ச்சி ...

போரினால்பாதிக்கப்பட்டபகுதிகளில் படைத்துறை பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இலங்கை அரசு தொடர்புகளை பேண வேண்டும். தீர்மானம் 51ஃ1 பிரகாரம் இலங்கைக்குபயணம் மேற்கொண்டு நிலமைகளை கண்காணிக்க ஐ.நாவுக்கு அனுமதி வழக்கப்பட வேண்டும்.

பல்லினமற்றும் பல மதங்களை கொண்டசமூகங்களுடன் பணியாற்றும்போது தொல்லியல் திணைக்களம், வன பாதுகாப்பு பிரிவு, நீர்ப்பாசண பிரிவு போன்ற திணைக்களங்கள் இனப்பாகுபாடு மற்றும் நேர்மையற்ற முறையில் செயற்படுவது மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள்அனைத்துலக தரத்திற்கு மேற்கொள்ளப்பட வேண்டும். தேர்தல் நேர்மையாக நடைபெறவேண்டும். இலங்கைக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்க ஐ.நா மனித உரிமைகள் ஆணைக் குழுவினை இலங்கை அரசு அழைக்க வேண்டும்.

இலங்கை அரசு நீதியை நிலைநாட்டுவதற்கும், அனைத்துலகவிதிகளின் அடிப்படையில் அனைத்துலக மட்டத்தில்நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தேவையேற்பட்டால் தடைகளைகொண்டுவரவும், குற்றவாளிகளின் சொத்துக்களை முடக்கவும்ஐ.நா மனித உரிமைகள் அமைப்பின் உறுப்பு நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஐ.நா அமைப்புக்கள், அனைத்துலகநிதி அமைப்புக்கள் இலங்கைக்கு உதவிகளை வழங்கும் போது இலங்கையின் மனிஉரிமை செயற்பாடுகள் மற்றும்ஆட்சி முறைகள் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஐ.நாமனித உரிமைகள் ஆணைக் குழுவின் நடவடிக்கைகளுக்குஅவர்கள் ஆதரவுகளை வழங்க வேண்டும்என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பிரித்தானி... தொடர்ச்சி ...

செயல்படும் கமெராவை பயன்படுத்தியே அப்பகுதி காவல்துறையினர் சடலத்தை கண்டெடுத்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் *Dyfed-Powys* காவல்துறையினர் தெரிவிக்கையில், வெள்ளிக்கிழமை சுமார் 4.40 மணியளவில் தங்களுக்கு தகவல் கிடைத்ததாகவும், சிறார்கள் இருவரை மீட்கும் முயற்சியில் ஏரியில் குதித்த நபர் ஒருவர் மாயமாகியுள்ளதாகவும் கூறப்பட்டது. இதனையடுத்து பல தரப்பு அதிகாரிகள் குழு சம்பவயிடத்திற்கு விரைந்ததாக தெரிவித்தனர்.

### இலங்கை அர ... தொடர்ச்சி ...

அதற்கான சாத்தியத்தை இந்த காணொளி பெருமளவுக்கு இல்லாமல் செய்துள்ளது. மறுபுறத்தில் இது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஓரளவுக்கு சாதகமானதாக உள்ளது என்று கூறலாம். ஆனால் நடைபெற போகும் தேர்தலில் ராஜபக்சக்களுடன் கூட்டுச் சேர்வது என்ற நிலைப்பாட்டை ரணில் விக்கிரம சிங்க எடுத்தால் அது அவருக்கு பாதகமாகவே முடியும்.

அதாவது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த இந்த காணொளி இலங்கை அரசியலில் அதிரடியான சில மாற்றங்களை செய்யக்கூடிய தன்மையை கொண்டிருக்கிறது என்பது வெளிப்படையாக தெரிகின்றது. அதேபோல ஜெனிவா போன்ற சர்வதேச அரங்குகளில் சர்வதேச விசாரணை அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இந்த காணொளி அமைந்துள்ளது.

• • •

## இலங்கையில்... தொடர்ச்சி ...

விடையத்தோடு உள்ளூர் அரசியல் தொடர்பு பட்டுள்ளது என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. இது ஒரு சிக்கலான விடையம் அப்படி என்றால் இந்த சர்வதேச பயங்கரவாத செயற்பாட்டிற்கும் உள்ளூர் அரசியல் செயற்பாட்டிற்கும் என்ன தொடர்பு.

எப்படி இந்த மாதிரியான தரப்புக்களை இவர்கள் பயன்படுத்த முடியும் என்ற கேள்விகள் எல்லாம் எழுப்ப முடியும்? அப்படியான கேள்விகளை நோக்கி இலங்கை பதிலளிக்க வேண்டிய தர்மசங்கடமான சூழல் உருவாகலாம். ஆனால் அதை எப்பொழுது எப்படி ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை எவ்வாறு இதை கையாளப்போகிறது. அதேநேரம் ஐநா மனித உரிமை பேரவைக்கு சர்வதேச அமைப்புக்கள் இந்த விடையம் தொடர்பில் எவ்வாறு அழுத்தங்களை பிரியோகிக்கப் போகின்றன என்பதை பொறுத்து இது அமையும்.

நிச்சயமாக சர்வதேச விசாரனை என்ற அடிப்படையில் ஐநாவால் சுட்டிக் காட்டப்படும் என்றுதான் நான் நினைக்கின்றேன் .

**மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகள்ள நிலையில் ஆணையாளரின் அறிக்கை நேற்றைய தினம் இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை ஏதாவது வகையில் இலங்கைக்கு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்குமா?**

இதில் குறிப்பிடுகின்ற அறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பில் பாற்கின்றபோது அப்படியொரு பெரிய தாக்கங்கள் ஏற்படுத்தும் வகையில் அந்த அறிக்கையின் சொற்கள் இருப்பதாக தெரியவில்லை. குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அந்த அறிக்கையில் ஜனாதிபதியின் அண்மைக்கால செயற்பாடுகளை வரவேற்றுள்ளார். குறிப்பாக 13 ஆவது திருத்த சட்டத்தை அடிப்படையாக கொண்டு வரும் நடவடிக்கைகள் தமிழ் கச்சிகளோடும் புலம்பெயர் அமைப்புக்களோடு உரையாடி இருப்பது மேலும் சில அரசியல் தீர்வு நல்லிணக்கம் முகமாக ஜனாதிபதி மேற்கொள்ளும் முயற்சிகளை அவர் வரவேற்கிறார்.

அதேவேளை நாடு ஒரு பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கிறது. நாட்டு மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதே நேரம் பொறுப்பு கூறலில் இலங்கை அரசாங்கம் சர்வதேசத்துடன் இணைந்து பயணிக்க வேண்டும் என்று கூறப் பட்டிருக்கிறது. ஆகவே இதற்கு எவ்வாறு பதில் அழிக்க வேண்டும் என்ற சொற்களை ஆணை யாளரே கொடுத்து இருப்பதாக தெரிகிறது.

இந்த அடிப்படையில் தான் இலங்கை பதிலளிக்க போகின்றது. நிச்சயமாக நாடு பொரு ளாதார நெருக்கடியில் சிக்கப்பட்டுள்ளது. அதில் இருந்து மீள்வதற்கு நாங்கள் கடுமையாக போராடி வருகிறோம். அதே நேரம் நல்லிணக்கத்திற்கான பல்வேறு முயற்சிகளையும் நாங்கள் முன்னெடுத்து வருகிறோம். அந்த வகையில் நிச்சயமாக நாங்கள் உள்நாட்டு பொறிமுறை ஊடாக இந்த விடயத்தை கையாளுவோம் என்ற அடிப்படையில் அண்மைக் காலமாக நடந்த சில நல்லிணக்க செயற்பாடுகளை அதற்குள் குறிப்பிட்டு அதே நேரம் ஏக்கனவே உங்களுக்கு தெரியும் தென்னாபிரிக்கா சையிலோடு பேசி இருந்தது. அதற்கான றாஸ்ட்டும் ஏக் கனவே தயார் நிலையில் உள்ளது. அது இன்னும் பாராளுமன்றத்தில் சமற்பிக்கப்பட்டு விவாதத்திற்குள் உள்வாங்கப்படவில்லை. அந்த விடயத்தையும் அரசாங்கம் சுட்டிக்காட்டும். ஆகவே எமது நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் உள்ள நிலையில் படிப்படியாக சில விடையங்களை முன்னெடுக்க முடியும் என்ற வகையில் இலங்கை அரசு தங்களது ராஜதந்திர நகர்வில் அவர்கள் சொல்லுவார்கள். அந்த அடிப்படையில் இது பாரிய அளவிற்கு பெரியோதொரு அழுத்தங்களை இலங்கை மீது வைப்பதாக தெரியவில்லை.

**தென்னிலங்கையில் உருவாகிவரும் நிலைமைகள் இனப்படுகொலை, மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்களில் சர்வதேசத்தின் கவனத்தை சிதறடிப்பதாக அமையுமா?**

உண்மையில் தற்போது வந்திருப்பதைப் போல் முன்பும் சனல்4 எங்களுடைய பிரச்சனைகள் தொடர்பாக கானொளி வெளியிட்டுள்ளது. அது அந்த நேரங்களில் இலங்கையில் மனித உரிமை மீறல் சார்ந்த பிரச்சனைகளை கொண்டு செல்வதற்கு அந்த நேரம் கானொளிகள் அதிகம் பயன்படுத்தப்பட்டது. ஆனால் அதனுடைய விளைவுகள் என்று பார்த்தால் இந்த பதினாலு வருடத்தில் தமிழ் மக்கள் திருத்தி அடையும் அளவிற்கு ஏதும் இல்லை

இவ்வாறான சூழலில் தற்பொழுது ஒரு எல்லை தாண்டிய பயங்கரவாதம் என்ற அடிப்படையில் இடம்பெற்ற தாக்குதல் இந்த உள்ளூர் அரசியல் சம்மந்தப்பட்டு இருக்கிறது. இன் நிலையில் இந்த கானொளி வெளிவந்திருப்பது தமிழர்களது பிரச்சனைகளை பலவீனப்படுத்தும் என்று கருத முடியாது. ஆனால் இலங்கை தொடர்பான அவதானம் இப்போது இன்னும் சற்று அதிகரித்ததாகவே நான் பாற்கின்றேன். எங்களை பலவீனப்படுத்தும் என்று பாற்க முடியாது. ஆனால் அது பலவிப்படுத்துமா என்பது தமிழர்களது அணுகுமுறையில் உள்ளது. எப்படி இதை தமிழர் தரப்பு எப்படி பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தமிழர் தரப்பு பார்த்து கொண்டிருக்கிறது . ஏன் என்றால் இவ்வாறான ஒரு கட்டமைப்பிற்குள் ஒரு உள்ளக பொறிமுறை எவ்வாறு சாத்தியமாகும் என்பதைத்தான் தமிழர் தரப்பு முன்வைக்க வேண்டும்

இவ்வாறு இந்த நாட்டில் கட்டமைப்பு சர்வதேச பயங்கரவாதிகளை தங்களுக்காக பயன் படுத்த முடியும் என்றால் இந்த நாட்டிற்குள் எவ்வாறு இந்த உள்ளக பொறிமுறையை வெற்றி கரமாக கொண்டு செல்ல முடியும். இப்படியான ஒரு நெருக்கடிக்குள் நாங்கள் இருக்கிறோம். ஆகவே இதை சாதகமாகத்தான் பயன்படுத்த வேண்டும். நாங்கள் ஏன் ஒரு பாக்கசார்பற்ற விசாரணையை கூறுகிறோம் ஏன் நாங்கள் ஒரு சர்வதேச விசாரனை தேவை என்பதை வலியுறுத்துகிறோம் என்பதற்கு இதை ஒரு உறு துணையாக தமிழர்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

• • •

## கிழக்கு மாகா... தொடர்ச்சி ...

அழிக்கப்படும் நிலைமைகள் காணப்படுகின்றன. ஏறாவூர்ப்பற்றில் சோதையன் கட்டு என்னும் நீண்டகாலமாக பாதுகாக்கப்பட்டுவந்த அரண் மண் அகழ்வுக்காக அழிக்கப்படுகின்றது. சோதையன் என்னும் மன்னன் வெள்ளத்திலிருந்து மக்களை பாதுகாப்பதற்காக இந்த அரண் அமைக்கப்பட்டு சுமார்ஆயிரம்ஆண்டுகளாக பாதுகாக்கப்பட்டுவந்த நிலையில் இந்த அணையினை உடைத்து மண் அகழ்வு செயற்பாடுகள் முன்னெடுப்பதுடன் இதற்கான அனுமதியை அதிகாரிகள் வழங்கியுள் ளனர்.

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத் தில் முன்னெடுக்கப்படும் பல உற்பத்தி பொருட்களுக்கு சரியான சந்தைவாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்படாத காரணத்தினால் அந்த உற்பத்திகளை நிறுத்திவிட்டு வேறு செயற் பாடு களுக்கு செல்லும் நிலையும் தமிழர்கள் மத்தியில் இன்று ஏற்பட்டுவருகின்றது.

இலங்கையில் இரண்டாது அதிகமான மரமுந்திரிகை செய்கைபண்ணப்பட்டுவந்த மட்டக் களப்பு மாவட்டத்தில் இன்று இந்த செய்கையில் ஈடுபடுவோர் மிகவும் குறைந்துவருகின்றனர். மரமுந்திரிகை செய்கைபண்ணப்பட்டுவந்த சுமார் 1500ஏக்கருக்கும் அதிகமான காணியை இலங்கை இராணுவம் வாகரை பகுதியில் அடைத்து பாரிய இராணுவமுகாம் அமைத்துள்ளது. இதேபோன்று சோளம் செய்கை மற்றும் நிலக்கடலை செய்கை என்பனவற்றிற்கு சரியான சந்தை வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்காத காரணத்தினால் அவற்றினை கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவையெல்லாம் தமிழர்களின் பொருளா தாரத்தினை திட்டமிட்டு அழிக்கும் செயற்பாடு களாகவே பார்க்கவேண்டியுள்ளது. அனைத்து வளங் களும் உள்ளது. அந்த வளங்கள் முறையாக பயன் படுத்தப்பட்டு உற்பத்திகள் முன்னெடுக்கப்படும் போது அதற்கான சந்தைவாய்ப்புகள் ஏற் படுத்திக்கொடுக்கப்படுமானால் கிழக்கின் பொரு ளாதாரம் முன்னெற்றமடையும்.

கிழக்கின் வளங்களை சரியானமுறையில் பயன்படுத்துவதற்கு தேவையான பொறிமுறைகள் ஏற்படுத்தப்பட்டு பாரியம்பரிய மற்றும் நவீன முறைகளிலான உற்பத்திகளும் தொழில்மு றைகளும் ஏற்படுத்தப்படவேண்டும். கிழக்கின் வளங்களை அள்ளிச்சென்று தமது சமூகத்தின் இருப்பினை மட்டும் உயர்த்துவதற்கு சிங்கள அரசுகள் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு அப்பால் தமிழர் தரப்பும் சிந்தனைரீதியான மாற்றங்களை ஏற்படுத்தி கிழக்கு நிலைமைகளை ஆராய்ந்து செயற்படமுன்வரவேண்டும்.

## இலங்கை அர ... தொடர்ச்சி ...

விக்கிரமசிங்கவுக்கு ஓரளவுக்கு சாதகமானதாக உள்ளது என்று கூறலாம். ஆனால் நடைபெற போகும் தேர்தலில் ராஜபக்சக்களுடன் கூட்டுச் சேர்வது என்ற நிலைப்பாட்டை ரணில் விக்கிரம சிங்க எடுத்தால் அது அவருக்கு பாதகமாகவே முடியும்.

அதாவது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த இந்த காணொளி இலங்கை அரசியலில் அதிரடியான சில மாற்றங்களை செய்யக்கூடிய தன்மையை கொண்டிருக்கிறது என்பது வெளிப் படையாக தெரிகின்றது. அதேபோல ஜெனிவா போன்ற சர்வதேச அரங்குகளில் சர்வதேச விசா ரணை அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இந்த காணொளி அமைந்துள்ளது.

## சீனாவில் ... தொடர்ச்சி ...

ஊடாக அரச தரப்பின் பல தகவல்கள் ஒட்டுக் கேட்கப்படலாம் என்ற அச்சங்களே இந்த முடிவுக்கு காரணம் என தெரி விக்கப்படுவதுடன், வெளிநாட்டு தொழில்நுட்டபத்தில் அதிகம் தங்கி யிருப்பதை தவிர்க்கும் நடவடிக்கை இது எனவும் கூறப்படுகின்றது.

அமெரிக்க தயாரிப்பு தொலைபேசிகளின் பாவனையை அரச உயர்மட்டத்தில் ரஸ்யா வும் அண்மையில் தடை செய்திருந்தது. வெளிநாட்டு புலனாய்வு அமைப்புக்கள் இந்த தொலை பேசிகளை பயன்படுத்தி தகவல்களை திருடலாம் என்று காரணம் கூறப் பட்டிருந்தது.

சீன தயாரிப்பு குவாவே வகை தொலை பேசிகளை அமெரிக்க அரசியல்வாதிகள் பயன் படுத்துவதை அமெரிக்க அரசு தடை செய் திருந்தது. தமது தகவல்கள் திருடப் படலாம் என்ற காரணத்தை அமெரிக்கா முன்வைத்திருந்தது. அதனை சில ஐரோப்பிய நாடுகளும் பின் பற்றியிருந்தன.

சீனாவின் ரிக்-ரொக் சமூகவலைத் தளத்தையும் அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் தடை செய்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## இலங்கை இன ... தொடர்ச்சி ...

பெருமளவு சிங்களவர்களைக் கொண்ட கல்விச்சமூக வல்லுனர்கள் தெரிவு செய்யப்பட்டு பலமாதங்கள்கூடினர். இதற்கான பெருமளவிலான கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொண்ட பின்னால் பின் வாங்கினர். இதேபோல் 2001-2002களில் கொழும்பில் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நீரா விக்கிரமசிங்க வழிகாட்டலில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழு உறுப்பினர்களும் கொஞ்சக்காலம் கொடுப்பனவுகளைப் பெற்று அனுபவித்து விட்டுப் பின்வாங்கினர். இதுபற்றி கலாநிதி நீரா விக்கிரமசிங்க விரக்தியடைந்திருந்தார். ஆக சிங்கள அரசியல் சமூகம் இத்தகைய நாடகங்களை அரங்கேற்றுவதும் சிங்கள கல்விச்சமூகம் இது தேசியவாதத்துக்கு எதிரானது என்று பின் வாங்குவதும் வரலாறு.

இவற்றின் நீட்சியே இன்று இராவணன் சிங்களவன் என சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரகடனம் செய்வதும் பௌத்த மதவெறி அமைப்பு “ராவணபலய” எனத் தமது அமைப்புக்கு பெயர் சூட்டுகின்ற கோமாளித் தனமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வரலாற்றாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் கூற்றுப்படி இராமர் - ராவணன் வாழ்ந்த கால மெனக் கருதப்படும் காலம் இற்றைக்கு 7000 ஆண்டுகளாகும். பௌத்தம் உருவானது இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர். சிங்களமொழி உருவாகத் தொடங்கியதே கி.பி. 5ஆம் 6ஆம் நூற்றாண்டுகள். அது ஒரு முழுமையான மொழியாக வளர்ச்சியடைந்தது சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே. இராமாயாணத்தின்படி இராவணன் ஓர் சிவபக்தன். அவன் ராவணன். இராவணேஸ்வரன், இலங்கேஸ்வரன் எனப்படும் பெயர்களால் அழைக்கப் பட்டான். அனைத்தும் தமிழ்ப் பெயர்களே. பௌத்தம் உருவாவதற்கு 4500 ஆண்டுகள் முன்னரும் சிங்களம் உருவாவதற்கு 5500 ஆண்டுகள் முன்னரும் வாழ்ந்த சங்கத்தமிழ் மன்னனான ராவணனை சிங்கள மன்னன் என்று பெருமை கொள்ள வேண்டிய அளவுக்கு சிங்களத் தேசியவாதம் பலவீனமாக இருப்பதும் சங்கத்தமிழ் நாகரீகத் தொன்மையை தமதாக்கி சிங்கள தேசியவாதத்தை கட்டியெழுப்ப வேண்டிய பரிதாபத்திற்குரிய நிலையிலும் இன்று சிங்களத் தேசியவாதம் இருக்கின்றது.

ஆனால் இத்தகைய பொய்கள், திரிபுகள், மாயைகள் அனைத்தையும் ஆட்சி அதிகாரம், இராணுவ, பொலிஸ் பலம் ஆகியவற்றைப் பயன்படுத்தி உண்மையாக்க முயலும் செயற்றிட்டங்களும், இப்பொய்களின் அடிப்படையில் வடக்கு - கிழக்கையும் சிங்கள பௌத்த மயமாக்கும் இனமத மேலாதிக்க செயற்றிட்டங்களிலுமே யுத்த முடிவுக்கு (2009) பின்னரான ஆட்சியாளர்கள் வேகமாக செயற்பட்டு வருகின்றனர். இச்செயற்பாடுகளுக்கு சட்ட அடிப்படைகளை தொல்லியல் திணைக்களம் இவர்களுக்கு சட்ட விரோதமாக வழங்கி வருகின்றது. தொல்லியல் திணைக்களம் இராணுவத்தையும் புத்த பிக்குகளையும் வைத்தே செயற்படுகின்றது. அதன் எந்த செயற்பாடுகளிலும் சட்ட திட்டங்களை பின்பற்றுவதோ, வெளிப்படைத் தன்மையோ கிடையாது. கண்டுபிடிக்கப்படும் பொருட்கள், ஆதாரங்களை *carbon dating* செய்வதோ அவை பற்றிய விளக்கங்களை மக்களுக்கு வெளியிடுவதோ கிடையாது. தொல்லியல் இடமென்றால் அது பௌத்தர்களுக்கான/ சிங்களவர்களுக்கான இடம் என்பது எழுதாத விதியாக்கப்பட்டுள்ளது. அகழ்வாராய்ச்சி செய்ய முன்னரே அங்கு இராணுவ, பொலிஸ் பாதுகாப்புடன் புத்த கோவில்கள் கட்டப்படுகின்றன. கட்டப்பட்ட பின்னால் அது பௌத்த இடமெனப் பிக்குகள்/ அரசியல்வாதிகள் அறிவிப்பார்கள்.

ஆகவே இலங்கை இனமோதலின் ஊற்றுக்கண்ணாகவும் இன்றுவரை அதன் நீட்சிக்குமான அடிப்படைக் காரணமாகவும் இருப்பது இலங்கையின் உண்மையான வரலாற்றுக்கும் புனையப்படும் வரலாற்றுக்கும் இடையிலான மோதலே. இலங்கை இனமோதலின் ஊற்றுக் கண்ணான வரலாற்றின் பல்வேறு அம்சங்களையும் வெளிக்கொணர்வதும், பாதுகாப்பதும், உலகறியச் செய்வதும் அவசியமும் அவசரமுமாகும். கல்வியை தாக்குதலிலிருந்து பாதுகாப்பதற்கான சரவதேச தினமான செப்ரெம்பர் 9இல் உலகம் வாழ் வரலாற்றாளர்கள், தொல்லியலாளர்கள் இலங்கையின் உண்மை வரலாற்றை வெளிக்கொணர உறுதியேற்க வேண்டும்.

• • •

## தமிழீழத்தின் ... தொடர்ச்சி ...

தெரியவில்லை. திரு டக்கலஸ் தேவானந்தம் போன்ற தமிழர்களே சிங்கள பேரினவாத அரசுக்கு ஆதரவாகவும் கைகூலிகளாகவும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இவர்கள் மக்கள் தலைவர்களாக செயல்படவில்லை. இதனால் இந்த திருத்தச் சட்டம் செயலற்றுபோய்விடும்.

### ஈழத்தமிழர்களின் தாகம்

தங்களை தாங்களே ஆட்சிசெய்ய மக்களாட்சியை விரும்புகின்றனர். எவருக்கும் அடிமையாகி வாழ விரும்பவில்லை. சுதந்திராமாக வாழ விரும்புகின்றனர். தனிநாடு என்பது அவர்களது நீண்டநாள் கோரிக்கையாக உள்ளது. கொலைகார சிங்களவர்களோடு சோந்து வாழ முடியாது. உரிமை பறித்தல், மறுத்தல், உயிர் மறுத்து கொலைசெய்தல், மிரட்டுதல் போன்ற செயல்பாடுகளை திட்டமிட்டு செயல்படுத்தும் சிங்களவர்களோடு இணைந்து வாழ்வது மிகவும் கடினமானது, ஆபத்தானது. அதனால் தனி ஈழம் ஒன்று தான் தீர்வாக இருக்கமுடியம் என்ற நம்பிக்கை உள்ளவர்கள் தமிழர்கள். அந்த எதிர்பார்ப்பில், நம்பிக்கையில் மண்ணள்ளிப்போடு பல நாடுகள் உள்ளன. எதிர்காலத்தில் இவர்கள் இலங்கை வரலாற்றில் காணாமல் போய்விடுவர். தமிழர்களின் தாயகம் தனிஈழம் என்ற கனவு கனவாகவே இருந்துவிடப் போகிறது. தமிழன் தன்மானத்தோடு தலை நிமிர்ந்து நிற்கவேண்டுமென்றால் தனிநாடு என்ற ஒற்றைக் குறிக்கோளுடன் செயல்படவேண்டும்.

இறுதியாக, மேலே குறிப்பிட்ட ஆட்களும், கட்சிகளும் இன்று இவ்வாறு செயல்படுவதற்கு காரணம் என்னவென்று ஆராய்வதற்குமுன் அவர்களது வரலாற்றுச் செயல்பாடுகளை ஆராய வேண்டும். ஒவ்வொருவரும் தனிப்பட்ட வருமான நோக்கோடு வாழ்கின்றார். அதனால் ஆய்வாளர் அரூஸ் அரசியல் தெளிவுடன் இந்த திருத்தச் சட்டத்தை வெளிப்படுத்துகின்றார். இவர்கள் உலக நாடுகளையும், அமைப்புகளையும் ஏமாற்றிக்கொண்டிருக்கின்றனர். எனவே தமிழருக்கு உரிமை மறுக்கும் தரணியாக மாறிவருகிறது. ஒவ்வொருவரின் நிலைப்பாட்டையும் நோக்கத்தையும் நன்கு உணர்ந்து விடுதலைச் செயல்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். தனி நாடு என்ற உணவு கொடுக்கவில்லை என்றா லும் தன்நிர்ணய உரிமை என்ற தண்ணீரை யாவது கொடுக்க உலக நாடுகள் முன்வரவேண்டும். மலரட்டும் தமிழீம், மடியட்டும் சிங்கள பௌத்த பேரினவாதம்.

• • •

## மக்களை ... தொடர்ச்சி ...

பிரித்தானியாவை தளமாகக் கொண்ட சனல் 4 போர் ஊடகம் கடந்த செவ்வாய்கிழமை (5) ஆதாரங்களை வெளியிட்டுள்ளது.

அதனை தொடர்ந்தே ரஞ்சித் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். இந்த தாக்குதலில் பங்குபற்றிய அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும், விசாரணைகள் சுயாதீனமாக அனைத் துலக உதவிகளுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

விசாரணைகளை மேற்கொள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைப்பது என்பது நேரத்தையும் மக்கள் பணத்தையும் விரையம் செய்யும் பணி. ஆதராங்கள் உள்ளதால் நேரிடையாகவிசாரணைக்குழுவைஅமைத்துபல ஆணைக்குழுக்கள் சமர்ப்பத்தி அறிக்கைகளின் அடிப்படையில் தொடரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின்சனல்போர்என்றசெய்தி நிறுவனம் செவ்வாய்க்கிழமை (5) வெளியிட்ட காணொளியில் இலங்கை இராணுவத்தின் புலனாய்வு அதிகாரிக்கும் உள்ளூர் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்குமிடையில் பிள்ளாயான் குழு எனப்படும் துணை இராணுவக்குழுவின் பேச்சாளர் மௌலானா என்பவரால் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டதாகவும், அதில் தாக்குதலுக்கான திட்டங்கள் வகுக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலின் பின்னர் வெளியிடப்பட்ட காணொளிகளில் அந்த கூட்டத்தில் கலந்து கொண்டவர்களே தற்கொலை தாக்குதலில் ஈடுபட்டதை தான் உறுதிப்படுத்தியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். கோத்தபாயா ராஜபக்சாவின் தேர்தல் வெற்றிக்காக இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனிடையே, தமது பதவிக்காக சொந்த மக்களையே படுகொலை செய்துவிட்டு பின்னர் அதனை விசாரணை செய்வதாக கூறி ஆட்சியை கைப்பற்றியது என்பது மக்களை மூட்டாள்களாக் கும் செயல் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா தெரிவித்தள்ளார்.

## மான்களின் ... தொடர்ச்சி ...

நிறுவனத்தினால் *Lion Club of Trincomalee Town, Lion Club of Centennial Paradise* ஆகிய நிறுவனங்களின் உதவியுடன் இவ் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இவ் நிகழ்வில் கிழக்கு மாகாண சுற்றுலா துறை தவிசாளர் திரு. ஏ.பி.மதனவாசன் அவர்கள், திருகோணமலை நகராட்சி மன்ற செயலாளர் திரு. வி.ராஜசேகர் அவர்கள், *Trinco Aid* இன் பணிப்பாளர் திருமதி. தயாளினி ஹரிகரன் அவர்கள், திட்ட ஆலோசகர் திரு. அனுஜன் அவர்கள், நிகழ்ச்சி முகாமையாளர் திரு ச.நவநீதன் அவர்கள், *Mr. Lion M M Jaladeen (Lion Club), Mr. Lion S Gobinath (Lion Club), Mr. Lion Floyd Barthelot (Lion Club)* அவர்களும், மற்றும் *Lion Club* உறுப்பினர்கள், நகராட்சி ஊழியர்கள், தன்னார்வளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## இளையோருக்கு ... தொடர்ச்சி ...

பட்டுள்ளனர். இது 1990 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 79 விகிதம் அதிகம். மரணமும் 28 விகி தத்தால் அதிகரித்துள்ளது.

204 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் 29 வகையான புற்றுநோய்கள் தொடர்பில் இந்த குழுவினர் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். 14 வயது தொடக்கம் 49 வயது வரையிலானவர்களிடம் இந்த ஆய்வு மேற்கொள் ளப் பட்டிருந்தது.

சில புற்றுநோய்கள் பரம்பரை மரபணுக்கள் மூலம் கடந்தப் படுகின்றன. ஆனால் சில அதிக இறைச்சி வகைகளை உள்ளெடுத்தல், மது, புகைத்தல், அதிக உப்பு பண்டங்களை உண்ணுதல், உடல் பருமன் அதிகரித்தல், அதிகளவில் மரக்கறி மற்றும் பழங்களை உள் ளெடுக்காததால் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.